# மாலை தீப்பொறி

MALAE THEEPORI

2025 ஜனவரி 1-15 தொகுதி 23 இதழ் 10 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200


# அம்பேத்கரை அவமதித்த அமித்ஷாவே பதவி விலகு!






# மார்க்சியம் – சனநாயகம் – சோஷலிசத்தின் எதிர்காலம்: சர்வதேச கருத்தரங்கு – கோழிக்கோடு



கேரள மாநிலம் கோழிக்கோடு பல்கலைக் கழகத்தில் செயல்படும், 'மார்க்சிய படிப்புகள் மற்றும் ஆய்வுகளுக்கான ஈஎம்எஸ் இருக்கை' சார்பில், 2024 டிசம்பர் 18 முதல் 20 வரை, -மார்க்சியத்தின் எதிர்காலம் பற்றிய ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது. வெளிநாடு மற்றும் பல்வேறு இந்திய மார்க்சிய அதில் ஆய்வாளர்கள், செயற்பாட்டாளர்கள் பல்வேறு தலைப்புகளில் ஆய்வுதாள்களை முன்வைத்தனர்.

டிசம்பர் 20ல், "இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கம் - பிரதிபலிப்புகள் மற்றும் எதிர்காலப் பாதைகள்" என்ற தலைப்பில் நடைபெற்ற அமர்வுக்கு, கேரள மாநில மேனாள் கல்வி அமைச்சர் தோழர். MA பேபி தலைமை தாங்கினார்.

"இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் நூற்றாண்டு விழா: சாதனைகள், படிப்பினைகள் மற்றும் சவால்கள்" என்ற தலைப்பில், சிபிஐஎம்எல் கட்சி பொது செயலாளர் தோழர். திபங்கர் உரையாற்றினார். இந்தியப் பாசிசத்தை வீழ்த்துவதில் கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற பணியாற்ற வேண்டும்.

கம்யூனிஸ்ட் தோழர்கள் மத்தியில் விரிந்த ஒற்றுமையை கட்டமைப்பது வழியாக தான், இந்திய பாசிசத்தை வலுமிக்க விதத்தில் வீழ்த்த முடியும்.

3ம் பக்கத் தொடர்ச்சி....

பாதுகாப்பதிலிருந்து இந்த அரசாங்கம் பெருங்குழும ஆதரவை தீவிரமாகச் சார்ந்திருப்பதைக் காட்டுகிறது. விவசாயிகள் இயக்கம், பெருங்குழும அபகரிப்புக்கு எதிரான ஆற்றல்மிகு வெகுமக்கள் எதிர்ப்பின் காட்சியை நமக்கு ஏற்கனவே காட்டியிருக்கிறது.

சமூக சமத்துவம், பாலின நீதி இவ்விரண்டும், பெரும் பிரிவு இந்திய மக்களை தீர்மானகரமான எதிர்ப்பில் தூண்டுவிக்கும் மற்றொரு தளமாகும். மிகச்சமீபத்தில் கொல்கத்தாவிலுள்ள ஆர்ஜி கர் மருத்துவக் கல்லூரி முதுநிலைப்பட்ட பயிற்சி மருத்துவர் கொடூரமாக வன்கொடுமை செய்து கொல்லப்பட்டதற்கு எதிராக வெகுமக்களின் கோபத்தின் அலையைக் குறிப்பிடலாம். மோடி ஆட்சியில், ஆணாதிக்க, பெண்வெறுப்பு எதிர்வினை இளம் பெண்களை வன்முறை வழியில் தார்மீக காவல்செய்வதிலிருந்து தொடங்கி, வன்புணர்வாளர்களை (குறிப்பாக தலித், இஸ்லாமியப் பெண்களை வன்புணர்வு செய்பவர்களை) பாதுகாப்பது, வரவேற்பு விழா நடத்துவது; மேலும் நிலப்பிரபுத்துவ ஆணாதிக்க காப் பஞ்சாயத்துகளை உள்நாட்டு ஜனநாயக நிறுவனங்களாகக் கொண்டாடுவது போன்றவையும் எதிர்ப்பை சந்திக்காமல் இல்லை. அம்பேத்கர் குறித்து, மாநிலங்களவையில் அமித்ஷா கூறிய இழிவான கருத்தும் இந்தியாவின் சக்திமிக்க சாதி எதிர்ப்பு திருஉருக்கு எதிரான இந்த அவமதிப்புக்கு எதிராக பொங்கி எழுந்த வெகுமக்கள் கோபமும் சமூக நீதி, சமூக சமத்துவம் தொடர்பான பிரச்சனையில் பாசிஸ்ட்களின் ஆழந்த சங்கடத்தையும் சேதத்தையும் சுட்டிக்காட்டுவதாகவும் உள்ளது.

இந்திய மக்கள் கைகளில் உள்ள மிகவும் சக்திவாய்ந்த ஆயுதம், உண்மையில் இந்தியாவின் காலனிய எதிர்ப்பு விடுதலைப் போராட்டமும் அதன் உத்வேகமூட்டும் மரபும் இந்தியாவை ஒரு மதச்சார்பற்ற, சோசலிச, இறையாண்மைகொண்ட குடியரசு என்று பிரகடனம் செய்த, விடுதலைப் போராட்ட லட்சியத்தில் எழுந்த அரசமைப்புச் சட்டமுமாகும். சற்றும் சளைக்காத பாசிச ஆயுதமயமான மதவெறி வெறுப்பு, பார்ப்பனிய மேலாதிக்கம், ஆணாதிக்கம் இவற்றுக்கு எதிராக, விடுதலை இயக்கத்தின் கனவுகளும் அரசமைப்புச் சட்டத்தில் பொறிக்கப்பட்டுள்ள நவீன இந்தியா லட்சியமும் துடிப்பான ஜனநாயகத்துக்கும் சமத்துவ சமூக அமைப்புக்கான புதுப்பிக்கப்பட்ட தேடுதலுக்கான மிகவும் ஆற்றல் கொண்ட மேடையாக இருக்கும்.

2025ல் கம்யூனிஸ்ட்கள், பாசிஸ்ட்கள் இருவருமே அவர்களது இயக்கத்தின் நூறாவது ஆண்டை தங்கள் சொந்த மண்ணில் கடைப்பிடிக்கும் போது, ஒவ்வொரு இந்திய கம்யூனிஸ்டும் சூழ்நிலையின் தேவைக்கேற்ப எழுந்து நிற்கவேண்டும்; பாசிச பேரழிவிற்கெதிராக மிகப்பெரும் வெற்றிகளுக்கான ஆண்டாக 2025 அய் மாற்றிட வேண்டும்.

# மாலெ தீப்பொறி

இருவார இதழ்

*2025 ஜனவரி 1 - 15*

தொகுதி 23 இதழ் 10

முதன்மை ஆசிரியர்

**சங்கர் .வீ**

ஆசிரியர்

**ஜி. ரமேஷ்**

ஆசிரியர்குழு

**பழ. ஆசைத்தம்பி**

**பாலசுந்தரம்**

**அ. சந்திரமோகன்**

**கே. ஜி. தேசிகன்**

மேலாளர்

**சொ. இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)**

**தமிழ்நாடு மாநிலக் கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

**நிர்வாக அலுவலகம்**
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com


# 2025அய் பாசிச தாக்குதலுக்கெதிரான பெரும் வெற்றிகளைப் பெறும் ஆண்டாக மாற்றுவோம்!

பாலஸ்தீனர்களுக்கு எதிராக காசாவில் இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல் நடந்து கொண்டிருக்க, 2024 பல நாடுகளில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்திய ஆண்டாக இருந்துள்ளது. நமது பிராந்தியத்தில், சிறீலங்கா அதன் வரலாற்றில், முதன்முறையாக ஒரு இடது சாய்வு கொண்ட ஆட்சியைக் கொண்டுவந்துள்ளது. பங்களாதேஷில் ஏற்பட்ட வெகுமக்கள் எழுச்சி, முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை நாட்டைவிட்டு ஓடி, இந்தியாவில் தஞ்சமடைய வைத்துள்ளது; ஆனால், இங்கு பிற்போக்கு ஜமாத்-சார்பு சக்திகள் உறுதிப்பட்டிருப்பதால் ஜனநாயகம் மீட்டெடுக்கப்படும் வாய்ப்பு நிச்சயமற்றதாக உள்ளது. சிரியாவிலும் கூட, வெகு நாட்களாக காத்திருந்த மிகவும் அவப்பெயர் பெற்ற சர்வாதிகார ஆசாத் ஆட்சி விழுந்துள்ளது. ஆனால் அது, அமெரிக்க ஆதரவு இஸ்ரேலின் தாக்குதலால் அடிவாங்கிக் கொண்டிருக்கிறது. பிரான்ஸ், உடனடி ஆபத்தான தீவிர வலதுசாரி வெற்றியை தடுத்து நிறுத்தி விட்டது. ஆனால், அய்க்கிய அமெரிக்கா, ட்ரம்பின் மறுவருகை வழியிலிருந்து தப்பிக்க முடியவில்லை.

ஆனாலும் வெகுநாட்களாக காத்துக்கிடந்த கோடிக்கணக்கான மக்கள் எதிர்பார்த்திருந்த மாற்றத்தை 2024, இந்தியாவுக்கு தரவில்லை. பாஜக தனித்த பெரும்பான்மையை இழந்திருந்தபோதும் ஒரு கூட்டணி ஆட்சியாக அதிகாரத்தை தக்கவைத்துக் கொண்டது. இதைத் தொடர்ந்து, தேர்தல் ஆணையத்தின் நிறுவப்பட்ட தேர்தல் வெளிப்படைத்தன்மை, நிறுவன நடுநிலைமை, பொறுப்பேற்பு இவற்றையெல்லாம் கேலிக்கூத்தாக்கி, அரியானாவில் அதிகாரத்தை தக்கவைத்துக்கொண்டது, மகாராஷ்ட்ராவில், மிகவும் சமமற்ற, அய்யத்திற்கிடமான தேர்தல் போராட்டத்தால் வெற்றியை வாரிச் சுருட்டிக் கொண்டது. 2024 மக்களவை தேர்தலுக்குப்பிறகான விளைவுகள், பாசிஸ்ட் இரும்புப்பிடியிலிருந்து எளிதான தேர்தல் மூலம் வெளியேறிவிடலாமென இந்தியா எதிர்பார்க்க முடியாது என்பதை தெள்ளத்தெளிவாக காட்டியிருக்கின்றன. 'இந்திய மக்களாகிய நம்மின்' முன்னோர்கள், 1949, நவம்பரில் நிறைவேற்றிய அரசமைப்புச் சட்டத்தை, துணிச்சல்மிக்க ஜனநாயக எழுச்சிக்கு குறையாத எதுவும் (நமது) குடியரசை பாசிஸ்டுகளின் பிடியிலிருந்து விடுவிக்கமுடியாது.

மோடி அரசாங்கத்தின் பத்தாண்டுகால அனுபவமானது, அத்தகையதொரு எழுச்சிக்கான ஆற்றலை போதுமான அளவில் நமக்கு சுட்டிக்காட்டுகிறது. மோடி அரசாங்கத்தின் செயல்திறனில், பொருளாதாரம் மிகவும் வலுவிழந்த அம்சமாகவே உள்ளது; 1990களின் தொடக்கத்தில் வந்த தாராளமயம்-தனியார்மயம்-உலகமயத்தை ஒருவாறு வரவேற்ற வெகுமக்கள் மனநிலை, சூறையாடும், கொள்ளையிடும் சலுகைசார் முதலாளித்துவ அமைப்புக்கு எதிராக தெளிவாக திரும்பத் தொடங்கியுள்ளது. இயற்கை வளங்களையும் பொருளாதார உள்கட்டமைப்புகளையும் கண்மூடித்தனமாக, சில தேர்ந்தெடுக்கப்பட்ட பெருங்குழுமக் குடும்பங்களுக்கு உடைமை மாற்றம் செய்துவிடுவது, கோடிக்கணக்கான இந்தியர்களுக்கு பெரிய அளவிலான வேலை இல்லாதிண்டாட்டத்தையும், ஆழ்ந்த அபகரிப்பையும், தாவிஎகிறும் வாழ்க்கைச் செலவையும் வாழ்வாதார நெருக்கடியையுமே பொருள்படுத்துகின்றன. அதானி குழுமத்திற்கெதிராக அதிகரித்த ஊழல் குற்றச்சாட்டுகளுக்குப் பிறகும் அரசாங்கம் அதானி குழுமத்தை முரட்டுத்தனமாக

**தொடர்ச்சி 2ம் பக்கம்..**

# இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் நூற்றாண்டு: சாதனைகளும்; பாடங்களும் சவால்களும்

—திபங்கர்

இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கம் தொடங்கப்பட்டு நூறாண்டுகள் ஆகின்றன. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்ட நாள் குறித்து பல்வேறு கருத்துகள் இருந்தாலும், சிபிஐ மற்றும் சிபிஐ(எம்எல்) கட்சிகள், 1925 டிசம்பர் 26 அன்று சிபிஐ ஒரு கட்சியாக தொடங்கப்பட்டதாக அங்கீகரிக்கின்றன. எப்படிப் பார்த்தாலும், 1920 களின் முற்பகுதியை இந்தியாவில் கம்யூனிச கருத்துகள் மற்றும் செயல்பாடுகள் வடிவம் பெறத் தொடங்கிய காலகட்டமாக நாம் அடையாளம் காணலாம், எனவே, கம்யூனிச இயக்கம் இந்தியாவில் ஒரு நூற்றாண்டு பழமையானது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இந்த உரையின் நோக்கம் இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாற்றை மறுபரிசீலனை செய்வது அல்ல. கடந்த கால அனுபவங்களிலிருந்து படிப்பினைகளும், உத்வேகமும் பெற்று நிகழ்கால சவால்களை எதிர்கொள்ள கவனம் குவிப்பதே நமது நோக்கம். இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முதல் நூற்றாண்டை நான்கு கட்டங்களாகப் பிரிக்கலாம் - 1. காலனிய சகாப்தம், 2. சுதந்திரத்திற்குப் பின்னும் அவசரநிலை மற்றும் அதை ஒட்டிய காலகட்டமும் 3. புதிய தாராளவாதக் கொள்கைகளும், தீவிர வலதுசாரி இந்துத்துவாவும் மேலாதிக்கம் பெற்ற 1990களின் காலகட்டம் 4. அப்பட்டமான பாசிச தாக்குதலின் தற்போதைய காலம்.

அதேபோல், சர்வதேச அளவிலும், இந்தக் காலகட்டத்தை பிரித்துப் பார்க்கலாம். 1917 ல் நடந்த ரஷ்ய புரட்சி மற்றும் 1949 ல் நடந்த சீனப் புரட்சியின் காலம். ரஷ்ய மற்றும் சீனப் புரட்சிகள், பல நாடுகளில் வெற்றிகரமான புரட்சிகளுக்கும் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் உலகளாவிய எழுச்சிக்கும் வழிகோலின. இரண்டாம் உலகப் போரில், பாசிச கூட்டணி அரசியல்ரீதியாகவும் -இராணுவரீதியாகவும் படுதோல்வியைக் கண்டது. 1959 ல் கியூபாவில் புரட்சி வெற்றி பெற்றது. 1975 ல் வியட்நாம் போரில் அமெரிக்க ஏகாதிபத்தியம் படுதோல்வியடைந்தது. இந்த நிகழ்வுகள் எல்லாம் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் எழுச்சியின் குறியீடுகள்.

சோவியத் யூனியனின் சரிவு, பனிப்போர் கால கட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தது. உலகை, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு மற்றும் கார்ப்பரேட் கொள்ளையின் புதிய கட்டத்திற்கு தள்ளியது. கம்யூனிஸ்ட் இயக்கம் பழைய சோவியத் சார்ந்த நாடுகளில் இன்னும் இழந்த இடத்தைப் பெறவில்லை. இருந்தபோதிலும், இந்த காலகட்டத்தில் லத்தீன் அமெரிக்க நாடுகள் மற்றும் ஆசியாவில் சில நாடுகளில் இடதுசாரி இயக்கங்கள் மக்களிடையே செல்வாக்கு பெற்று வளர்ந்துள்ளன. இருந்தபோதிலும், உலகின் பெரும் பகுதிகளில் தற்போது பாசிச தீவிர வலதுசாரிகளின் புதுப்பிக்கப்பட்ட எழுச்சியை நாம் காண்கிறோம்.

இந்தியாவில், கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆரம்ப உத்வேகத்திற்கும், புறத்தூண்டுதலுக்குமான காரணங்கள்: 1. ரஷ்யப் புரட்சியின் வெற்றி 2. காலனிய ஆட்சிக்கு எதிரான போராட்டங்கள் 3. இந்தியாவில் உள்ள நிலப்பிரபுத்துவ அடக்குமுறை மற்றும் சமூக அடிமைத்தனத்திற்கு எதிரான உணர்வுகள்.

ரஷ்ய புரட்சியின் தாக்கத்தை, கம்யூனிஸ்டு களைத் தாண்டி, இந்தியாவின் காலனிய எதிர்ப்பு உணர்வு மற்றும் சமூக சமத்துவம் மற்றும் விடுதலைக்கான தேடலில் காணமுடிந்தது. பகத்சிங் மற்றும் அவரது தோழர்கள் முதல் நோபல் பரிசு பெற்ற ரவீந்திரநாத் தாகூர் வரையிலும், அம்பேத்கர் முதல் பெரியார் வரையிலும், இந்தியாவின் சுதந்திர இயக்கம், சமூக நீதி இயக்கம், இலக்கியம் மற்றும் மக்கள் கலாச்சாரத்தின் பிற துறைகளில் ரஷ்ய புரட்சியின் தாக்கத்தை நாம் காணலாம்.

சில நாடுகளில், கம்யூனிஸ்டுகள் காலனிய எதிர்ப்புப் போராட்டங்களின் முன்னணி அரசியல் சக்தியாக உருவெடுத்தனர். தேசிய விடுதலை போராட்டங்களினூடே சோசலிசத்தைக் கட்டியெழுப்பவதில் வெற்றி பெற்றனர். அதே காலகட்டத்தில், இந்தியாவில், கம்யூனிச இயக்கம் கணிசமாக வளர்ந்தது. ஆனால், இந்திய அரசியலில், முன்னணி நீரோட்டமாக வளர்வதில் கம்யூனிஸ்டுகள் வெற்றிபெறவில்லை. ஆயினும்கூட, கம்யூனிஸ்ட் சித்தாந்தம் மற்றும் இயக்கத்தின் வினையூக்கி, இவற்றின் தாக்கம், கம்யூனிஸ்ட் கட்சியின் உண்மையான அமைப்பு பலத்தை விட அதிகமாக இருந்தது. இந்திய சுதந்திர இயக்கத்தின் மிகப்பெரிய இளைஞர் ஆதர்ஷம், அழியாத தியாகி பகத்சிங், கம்யூனிஸ்ட் முன்னோடியாக இருந்தார். நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான இயக்கங்களைக் கட்டியெழுப்புவதிலும், தொழிலாளர் வர்க்கத்தை ஒன்று திரட்டுவதிலும், சமூக சமத்துவம் மற்றும் மத நல்லிணக்கத்துக்கு போராடுவதிலும் கம்யூனிஸ்ட் தலைமை பரந்த தாக்கத்தை உருவாக்கியது. சுதந்திரபோராட்டத்திற்கு

பரந்த முற்போக்கான திசைவழியை கம்யூனிஸ்ட் தலைமை வழங்கியது.

நாட்டுப் பிரிவினை, அதுவரை கண்டிராத வகுப்புவாத படுகொலைகள் மற்றும் எல்லையைத் தாண்டி லட்சக்கணக்கான குடும்பங்களின் புலம்பெயர்வு ஆகியவற்றின் அதிர்ச்சியுடன் வெள்ளையர்களிடமிருந்து இந்திய விடுதலை வந்தது, இருந்தபோதிலும், சுதந்திரத்திற்கு பிறகு எழுதப்பட்ட இந்திய அரசியலமைப்புச் சட்டம், இந்தியாவை ஒரு இந்து நாடாக மாற்றும் யோசனையை நிராகரித்தது. அனைத்து குடிமக்களுக்கும் சம உரிமையுடன் கூடிய மதச்சார்பற்ற ஜனநாயகத் தன்மையைத் தேர்ந்தெடுத்தது. இந்து ராஷ்டிரத்தை விரும்பி அன்றைய அரசியல் சட்டத்தை கடுமையாக எதிர்த்த ஆர்எஸ்எஸ் மற்றும் இந்து மகாசபை தனிமைப்படுத்தப்பட்டு பலவீனமாகவே இருந்தன. 1951 அக்டோபர் 25 முதல் 1952 பிப்ரவரி 21 வரை நடைபெற்ற முதல் நாடாளுமன்றத் தேர்தலில், கம்யூனிஸ்ட் கட்சி 16 எம்.பி.க்களுடன் இரண்டாவது பெரிய கட்சியாக உருவெடுத்தது. ஆர்.எஸ்.பி., பி.டபிள்யூ.பி, பார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகளுடன் இணைந்து இடதுசாரிகள் 22 இடங்களையும், சோசலிஸ்டுகள் 12 இடங்களையும் வென்றனர், இந்து மகாசபை மற்றும் ஜனசங்கம் முறையே 4 மற்றும் 3 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றன.

புதிதாக உருவாக்கப்பட்ட கேரள மாநிலத்தில் முதல் சட்டமன்றத் தேர்தலில் தோழர் இ.எம். எஸ்.நம்பூதிரிபாட் தலைமையில் கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்றனர். மாநில ஆட்சிக்கு தலைமை தாங்கும் முதல் காங்கிரஸ் அல்லாத கட்சியாக கம்யூனிஸ்டுகள் உருவெடுத்தனர். இதன் மூலம் இந்தியாவின் தேர்தல் வரைபடத்தில் கம்யூனிஸ்ட் செல்வாக்கு விரிவடைந்தது. ஈ.எம். எஸ் அரசாங்கம் தனது முழு பதவிக்காலத்தை முடிக்க அனுமதிக்கப்படவில்லை. எதிர்க்கட்சி அரசாங்கத்தை கவிழ்த்ததில் ஈ.எம்.எஸ் அரசாங்கம் முதல் பலியாகியது. தற்போதைய மோடி காலத்தில் இந்தப் போக்கு சர்வ சாதாரணமாக நடப்பதை காணமுடிகிறது.

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் புரட்சிகர போக்கு, வங்கத்தின் தேபாகா மற்றும் தெலுங்கானா போராட்டங்களின் புரட்சிகரச் சுடரை மீண்டும் பற்றவைக்க முயன்றது. அப்படித்தான் 1967 மே மாதம் நக்சல்பாரி நிகழ்ந்தது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு சிபிஐ(எம்எல்) உருவானது. நக்சல்பாரி விவசாயிகளின் எழுச்சி, நாடு முழுவதும் ஒரு புரட்சிகரப் பாதைக்கு ஒளியூட்டியது. மிகக் கொடூரமான அரசு அடக்குமுறைக்கு மத்தியிலும் நக்சல்பாரியின் உணர்வுகள் நிலைத்திருக்கின்றன. 1970களை மக்கள் விடுதலைக்கான பத்தாண்டுகளாக மாற்றும் இலக்கை நக்சல்பாரியின் எழுச்சி அடையத் தவறியது என்பது உண்மையாக இருக்கலாம். இருப்பினும், அந்த போர்க்குணமிக்க எழுச்சி, கம்யூனிஸ்ட் இயக்கத்தை இந்தியாவின் மிகவும் ஒடுக்கப்பட்ட சமூகப் பிரிவுகள் மற்றும் பின்தங்கிய பகுதிகளுக்கு கொண்டு சென்றது.

தேர்தல் களத்திலும், 1967க்குப் பிந்தைய காலகட்டத்தில்தான் கம்யூனிஸ்ட் செல்வாக்கு விரிவடைந்தது. 1960களின் பிற்பகுதியில் காங்கிரஸின் வரலாற்றுச் சரிவு மற்றும் பிளவுகள் தொடங்கின. இந்தப் போக்கு அவசரநிலைக்குப் பிறகு இன்னும் அதிகமானது. நிலச் சீர்திருத்தங்கள், ஊதிய உயர்வுக்கான போராட்டங்கள் மற்றும் உள்ளூர் சுய-நிர்வாகம் மூலம் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதும், விரிவுபடுத்துவதும் கம்யூனிச செல்வாக்கு நிலைநிறுத்தப்பட்டு விரிவுபடு த்தப்படுத்தப்படுவதற்கானமுக்கிய கூறுகளாக இருந்தன. இருபதாண்டுகளுக்கு முன்பு இடதுசாரிகள் மூன்று மாநில அரசாங்கங்களை வழிநடத்தியதையும் அறுபது பேர் கொண்ட குழுவை பாராளுமன்றத்திற்கு அனுப்பியதையும் நாம் அறிவோம்.

கடந்த 15 ஆண்டுகளில் இந்தியாவில் இடதுசாரிகளின் தேர்தல் பலம் கடுமையான சரிவை சந்தித்துள்ளது. மக்கள் நலத் திட்டங்களை விலையாகக் கொடுத்து, கார்ப்பரேட்-சார்பு வளர்ச்சி மாடலுடன் கொள்கை சமரசம் செய்து கொள்ள முயற்சித்ததானது, மேற்கு வங்கத்தில் இடதுசாரிகளின் சரிவைத் தூண்டியது. வங்கத்தில் வலதுசாரிகள் காலூன்ற இது வழி வகுத்தது. அனைத்திந்திய சூழலில் வேகமாக வளர்ந்து வந்த பாசிச ஒருங்கிணைப்பும் வங்க மாநிலத்திற்குள் ஏற்பட்ட வலதுசாரி மாற்றத்தை வலுப்படுத்தியது.

இன்று இந்தியாவில் பாசிசத்தின் எழுச்சி மற்றும் ஒருங்கிணைப்பு கம்யூனிஸ்டுகளுக்கு மட்டும் மிகப்பெரிய சவாலாக இல்லை. ஒரு மதச்சார்பற்ற ஜனநாயக குடியரசாக, வெளிப்படைத்தன்மையும், பன்முகத்தன்மையும் கொண்ட சமூகமாக, நவீன இந்தியா பற்றிய அரசமைப்புச்சட்டப் பார்வைக்கே பாசிசம் சவாலாக உள்ளது. ஜனநாயகத்திற்கான மிகவும் துணிவுமிக்க, முரணற்றப் போராளியாக, இந்திய பாசிசத்தின் தாக்குதலுக்கு எதிர்ப்பு அரணாகச் செயல்படுவதற்கும் கம்யூனிஸ்டுகள் தங்கள் தலைமைப் பாத்திரத்தை மீண்டும் நிலைநாட்டியாக வேண்டும்.

இன்றைய இந்தியாவில், பாசிசத்தின் தேசிய மற்றும் வரலாற்றுத் தனித்தன்மைகளை கவனத்தில் கொண்டு, இந்தியாவில் பாசிசம் என்பதை விட இந்திய பாசிசம் என்ற சொற்களை நான் தேர்வு செய்யவே விரும்புகிறேன். இத்தாலி, ஸ்பெயின் மற்றும் ஜெர்மனியில் பாசிசத்தின் எழுச்சியின் ஆரம்ப காலத்தில், பாசிசத்தை தேசிய தனித்தன்மைகள் கொண்ட ஒரு சர்வதேச அரசியல் போக்காக சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கம் சரியாக அடையாளம் காட்டியது. இன்று இந்தியாவில் பாசிசத்தின் வளர்ச்சியை உலகளாவிய தீவிர வலதுசாரிகளின் புதுப்பிக்கப்பட்ட வளர்ச்சியின்

பின்னணியில் பார்க்க வேண்டும். இந்த நிகழ்வின் குறிப்பிட்ட இந்திய பரிமாணத்தில் ஆர்எஸ்எஸ் முக்கிய வரலாற்றுப் பங்கு வகிக்கிறது.

இருபதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் அய்ரோப்பிய பாசிசத்தின் பல்வேறு நிகழ்வுகள் எழுச்சியையும் வீழ்ச்சியையும் கொண்டிருந்தன. இதற்கு நேர்மாறாக, இந்திய பாசிசம் மெதுவாக வளர்ந்து கடந்த முப்பதாண்டுகளில் நிலையான வளர்ச்சியை கண்டிருக்கிறது. 2014 இல் மோடி ஆட்சிக்கு வந்தபின் இந்திய பாசிசம் உச்சத்தை எட்டியுள்ளது. இந்திய பாசிசம், இந்திய சமூகத்தின் பிற்போக்கு அம்சங்களிலிருந்து, குறிப்பாக சாதி அமைப்பு, ஆணாதிக்க அமைப்பு, நிலப்பிரபுத்துவ எச்சங்கள் ஆகியவற்றிலிருந்து அதன் வலிமையைப் பெறுகிறது. வெற்றிகரமான ஜனநாயகப் புரட்சியின் மூலம் மட்டுமே நிறைவேற்றப்படக்கூடிய தீர்க்கமான அடி எதுவும் விழாததால், இந்த அம்சங்கள் நீண்ட நாள் நிலைத்து நிற்கின்றன. இது தவிர, இந்திய பாசிசம் பாராளுமன்ற ஜனநாயகத்தின் நிறுவன பொறிமுறையையும் ஆழமாக ஊடுருவி, இந்தியாவின் சலுகைசார் முதலாளித்துவத்துடன் ஒரு சிக்கலான தொடர்பையும் உருவாக்கியுள்ளது. அமெரிக்க-இஸ்ரேல் அச்சுடன் இந்திய அரசின் போர்த்தந்திர கூட்டு, இந்திய சந்தை மற்றும் இந்தியாவின் வளங்கள் மீதான உலகளாவிய ஈர்ப்பு மற்றும் சர்வதேச அரங்கில் புலம்பெயர்ந்த இந்தியர்களின் வளர்ந்து வரும் செல்வாக்கு ஆகியவற்றை இந்திய பாசிசம் பயன்படுத்துகிறது. (சியோனிசத்துடன்) யூத தேசியவாதத்துடன் இந்துத்துவாவின் நெருங்கிய கருத்தியல் உறவுகள் மற்றும் சர்வதேச அளவில் தேசிய பழமைவாதத்தின் பெயரால் வளர்ந்து வரும் வலதுசாரி சித்தாந்தங்களின் தாக்கமும் இந்திய பாசிசத்தின் மேல் படர்வதை நினைவில் கொள்ள வேண்டும்.

உழைக்கும் மக்களின் கார்ப்பரேட் எதிர்ப்பு அணிதிரட்டலுடன் சாதி எதிர்ப்பு மற்றும் ஆணாதிக்க எதிர்ப்புப் போராட்டங்களைக் கூர்மைப்படுத்தி, பாசிசத் தாக்குதலுக்கு எதிராக சக்திவாய்ந்த எதிர்ப்பைக் கம்யூனிஸ்ட் இயக்கம் கட்டியெழுப்ப வேண்டும். அரசு அதிகாரத்தில் வேரூன்றியிருக்கும் பாசிச சக்திகளை தேர்தல் களத்திலும் சந்திக்கவேண்டும். தேர்தல் களத்தில் பாசிச முகாமை பலவீனப்படுத்தவும் தனிமைப்படுத்தவும் அரசியலமைப்பையும் குடியரசையும் அவர்களின் பிடியில் இருந்து மீட்கவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். அய்க்கிய முன்னணி போர்த்தந்திரத்தை முழுமையாகப் பயன்படுத்துவது, பாசிச ஆட்சிக்கு எதிராக அனைத்து சக்திகளை அணிதிரட்டுவது, வெறுப்பு, பொய்கள், வன்முறையின் பாசிச பிரச்சாரத்தை எதிர்த்துப் போராடுவது, மக்களின் உரிமைகள், நலன்களைப் பாதுகாப்பது போன்ற அனைத்து முன்முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும்.

நாம் இந்தியக் குடியரசின் எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். அரசமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொண்ட போதே, குடியரசின் பயணத்தைத் தடுக்கக்கூடிய, தடம் புரளச் செய்யக்கூடிய இடர்பாடுகள் குறித்து அதன் சிற்பிகள் அன்றே கணித்தனர். 1949 ஆம் ஆண்டு நவம்பர் 25 ஆம் தேதி அரசமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொண்ட தினத்தன்று, டாக்டர் பி ஆர் அம்பேத்கர் அவர்கள் அரசியல் நிர்ணய சபையில் ஆற்றிய உரையில் மிகவும் நுண்ணறிவுமிக்க கருத்துகள் இருந்தன. "எவ்வளவு நல்ல அரசியலமைப்பாக இருந்தாலும், அதை நடைமுறைப் படுத்துபவர்கள் மோசமாக இருந்தால் அது கெட்டதாக மாறுவது உறுதி" என்று எச்சரித்தார். அரசமைப்புச் சட்டம் உருவான ஆண்டுகளில் அதை வெளிப்படையாக எதிர்த்த ஆர்.எஸ்.எஸ்., இன்று அரசு அதிகாரத்தின் கடிவாளத்தைக் கட்டுப்படுத்துகிறது. இந்த முரண்பாட்டின் விளைவை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். பெரும்பான்மை(பெரும்பான்மை மக்களின்)வாதமே சட்டம் என்று கூறும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் இப்போது நம்மிடையே உள்ளனர். பாஜக அல்லாத மாநில அரசுகளை இடையூறு செய்வதிலும், கவிழ்ப்பதிலும் சிறப்பு அக்கறை காட்டும் ஆளுநர்கள் நம்மிடையே உள்ளனர். அரசியலமைப்பிற்கு முரணானச் சட்டங்களை இயற்றுவதற்கும் ஜனநாயக விவாதங்களை படுகொலை செய்ய மட்டுமே நாடாளுமன்ற அமர்வுகள் பயன்படுத்தப்படுவதை நாம் காண்கிறோம்.

அதே உரையில், அரசியலில் தனிநபர் வழிபாடு பற்றியும் அம்பேத்கர் பேசியுள்ளார். அரசியலில் தனிநபர் வழிபாடு "அரசியல் விழுமியங்களை அழித்து சர்வாதிகாரத்திற்கு இட்டுச்செல்லும்" என்று கணித்தார். சமூக ஜனநாயகத்துடன் அரசியல் ஜனநாயகத்தை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். அரசமைப்புச்சட்டத்தின் வரைவை அறிமுகப்படுத்தியபோது, "இந்திய அரசமைப்புச்சட்டம் என்ற மேல்கட்டுமானம் ஜனநாயகமற்ற சமூக அ டித்தளத்தின் மேல் நிற்கிறது" என்று அம்பேத்கர் சொன்னார். இந்திய அரசியல் அரசமைப்புச் சட்டத்தை வலுப்படுத்த இந்திய சமூகத்தின் ஜனநாயக அடித்தளத்தை வலுப்படுத்தவேண்டும் என்றார் அம்பேத்கர்.

மிகவும் சிலாகிக்கப்பட்ட பாரம்பரிய கிராம சமூகங்களுக்குப் பதிலாக, தனிப்பட்ட குடிமக்களை குடியரசின் அங்கத்தினர்களாக, இந்திய அரசமைப்புச் சட்டம் நிலைநிறுத்தியுள்ளது. இந்தியா ஏற்கனவே ஒரு தேசமாகிவிட்டது என்ற மாயையான எண்ணத்திற்கு மாறாக 'இந்திய மக்களாகிய நாம்' என்ற வெளிப்பாட்டின் மூலம் அனைத்து பன்முகத்தன்மையையும் கூட்டு ஜனநாயக அடையாளத்தையும் அரசமைப்புச் சட்டம் முன்னிறுத்தியுள்ளது. தேச வளர்ச்சியில்

சாதி மிகப்பெரிய தடை என்று அம்பேத்கர் கருதினார். சமூக ஜனநாயகம் மற்றும் தேசிய ஒற்றுமையின் அடித்தளமாக சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய பிரிக்க முடியாத மும்மையை (மூன்று தத்துவத்தை) அம்பேத்கர் வலியுறுத்தினார். பெரும்பான்மைவாதம் மற்றும் அதிகப்படியான மையப்படுத்துதலின் அபாயங்களை அரசமைப்புச் சட்டம் உணர்ந்தே இருந்தது. மேலும் இந்த அபாயகரமான அச்சுறுத்தல்களிலிருந்து சிறுபான்மை உரிமைகள் மற்றும் கூட்டாட்சி நலன்களைப் பாதுகாப்பதில் கவனமாக இருந்தது. "இந்து ராஜ்ஜியம்" உருவாக்கப்பட்டால் அது இந்தியாவிற்கு மிகப்பெரிய பேரழிவாக இருக்கும், எந்த விலை கொடுத்தேனும், அது தடுக்கப்பட வேண்டும் என்ற அம்பேத்கரின் மிகத் திட்டவட்டமான எச்சரிக்கையையும் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்தியாவை இந்தப் பேரிடர் கட்டத்தில் இருந்து மீட்டெடுப்பது இன்று கம்யூனிஸ்ட்டுகளின் தலையாய கடமை. அரசு இயந்திரத்தைப் பயன்படுத்தி இந்தியாவை பேரிடருக்கு இட்டுச் செல்வதை எதிர்த்துப் போராட வேண்டும். தட்டுத் தடுமாறும் ஜனநாயகத்தையும் வலுவான அடித்தளத்தில் நிறுத்த வேண்டும். சமூகத்தையும் அரசையும் முழுவதுமாக ஜனநாயகமயமாக்குவதன் மூலம் பாசிசத்தின் தீர்க்கமான தோல்வியை உறுதிசெய்ய வேண்டும். இது கம்யூனிஸ்ட்டுகளின் வரலாற்றுக் கடமை.

சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தீர்க்கப்படாத சவால்களுக்கு தீர்வு காணும் பொறுப்பும் இந்திய கம்யூனிஸ்டுகளின் முன் உள்ளது. சோவியத் யூனியனின் சரிவிற்கான காரணங்கள் பற்றிய புரிதல், கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு, குறிப்பாக ஆட்சியில் இருக்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு, புரட்சிக்குப் பிந்தைய அல்லது வேறெந்த நிலையில் இருந்தாலும் தேவை. சோவியத் யூனியனில், கம்யூனிஸ்ட் கட்சி மக்களிடமிருந்து மிகவும் துண்டிக்கப்பட்டு, அரசின் அதிகாரத்துவ எந்திரத்தில் முழுமையாக மூழ்கியது, எழுபதாண்டுகளுக்குப் பிறகு வெளியில் இருந்தோ அல்லது உள்ளே இருந்தோ எந்த பெரிய இராணுவத் தலையீடும் இல்லாமல் முழுக் கட்டமைப்பும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது.

பொருளாதார தேக்க நிலை, வெளியுறவுக் கொள்கையில் திரிபுகள், நலிந்த உள்நாட்டு ஜனநாயகம் மாறிவரும் சூழலுக்கு ஈடுகொடுக்கமுடியாத கொள்கை அளவிலான தேக்கநிலை ஆகியவை மக்கள் ஆதரவை கம்யூனிஸ்டுகள் பெருமளவில் இழக்க வழிவகுத்தது. அதுமட்டுமல்லாமல், கம்யூனிஸ்ட் கட்சி ஆளும் பாத்திரத்தின் நியாயத்தன்மையையும் கூட இழந்தது. 'மக்களிடம் இருந்து மக்களுக்கு' என்ற அடிப்படையிலான தகவல் தொடர்பு குறைந்து கட்சிக்கும் மக்களுக்கும் இடையேயான இடைவெளி அதிகமானது, அதனால் மக்கள், கட்சி மற்றும்அரசுஇடையேயானசமநிலைசீர்குலைந்தது. முதலாளித்துவ அமைப்புகளுடன் ஒப்பிடுகையில் ஜனநாயகம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பேற்றல் ஆகிய எல்லா விசயங்களிலும் அதிகாரத்தில் இருக்கும் கம்யூனிஸ்டுகள் உயர்ந்தவர்களாகக் காணப்பட வேண்டும். எல்லா இடங்களிலும் உள்ள கம்யூனிஸ்டுகள் சோவியத் தோல்வியிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு முக்கிய பாடம் இது.

சோஷலிச புரட்சி நடந்த நாடுகளில் சமத்துவம், வறுமையின்மை, எல்லோருக்கும் கவுரவமான வேலை மற்றும் உழைக்கும் மக்களின் வாழ்நிலை-வேலை நிலைகளில் அடிப்படை முன்னேற்றங்களை நன்கு காணமுடிந்தது. ஆனால் உற்பத்தி செயல்முறைகள், இயந்திரங்கள் பயன்பாடு, தொழில்நுட்பத்தின் பயன்பாடு இவற்றினால் உருவாகும் சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் மானுடம் அந்நியப்படுதல் ஆகியவற்றின் அடிப்படையில் முதலாளித்துவத்திலிருந்து நடப்பில் உள்ள சோசலிசத்தை வேறுபடுத்திக் காணும் வாய்ப்பு மிகக் குறைவே. காலநிலை நெருக்கடி, சுற்றுச்சூழல் சீரழிவு, வளர்ந்து வரும் வேலையின்மை மற்றும் தொழிலாளரை வெளியேற்றும் தொழில்நுட்பங்களின் கண்மூடித்தனமான பயன்பாட்டால் ஏற்படும் பணிநீக்கங்கள் ஆகிய விஷயங்களில் சோசலிச மாதிரிகள் முதலாளித்துவத்தின் நாசகரமான, தோற்றுப் போன பாதைகளுக்கு தரமான மாற்றாக நிற்க வேண்டும்.

முடிக்கும் முன், நாம் உடனடியாக கவனிக்க வேண்டிய தேசிய சூழலுக்கு திரும்புகிறேன். வரலாற்றின் இயக்கப் போக்கில், கடந்த சில பத்தாண்டுகளாக சுதந்திரத்திற்குப் பிந்தைய இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கம் பல்வேறு நீரோட்டங்களாக, அமைப்புகளாக பிரிந்து நிற்கின்றன. இன்று நமது குடியரசும், அரசியலமைப்புச் சட்ட ஆட்சியும் முன்னெப்போதும் இல்லாத நெருக்கடியில் உள்ளன. கம்யூனிஸ்ட்டுகள், இன்றைய அவசரத் தேவையை உணர்ந்து முன் எப்போதையும் விட கூடுதலாக நெருங்கி வர வேண்டும். போராடும் அணிகளின் ஒற்றுமை எவ்வளவுக்கு எவ்வளவு பெரியதாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு பாசிச எதிர்ப்பு வலுப்பெறும்; இந்திய ஜனநாயகத்தின் எதிர்காலம் ஒளிமிக்கதாக இருக்கும். கம்யூனிஸ்ட் அறிக்கையை பொழிப்புரையாகக் கூறுவதாயின் (வேறு சொற்களில் கூறுவதாயின்), சுதந்திரத்தின் வாக்குறுதிகள் மீட்டெடுக்கப்பட காத்திருக்கும் வேளையில், பாசிசத்தின் சங்கிலிகளைத் தவிர நாம் இழப்பதற்கு வேறெதுவும் இல்லை.

**தமிழாக்கம் : பிஆர்எஸ். மணி**

# தோழர் நல்லகண்ணு 100




இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தோழர் நல்லகண்ணுவிற்கும் 100 வயது. தோழர் நல்லகண்ணு அவர்களுடைய 100ஆவது பிறந்தநாள் விழா இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு தலைமை அலுவலகமான சென்னை பாலன் இல்லத்தில் 26.12.2024 அன்று நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) விடுதலை கட்சியின் தமிழ்நாடு மாநிலச்செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி உரையாற்றினார். தனது உரையில் தோழர் நல்லகண்ணு அவர்களின் 100ஆவது பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டுள்ள அனைவருக்கும் சிபிஐ எம்எல் கட்சியின் சார்பாக வணக்கத்தை தெரிவித்துக் கொண்ட அவர், “பொதுவாக வாழ்கின்ற காலங்களில் தலைவர்களின் பிறந்தநாளை கொண்டாடுவது.. அவர்களைப் புகழ்வது, பாராட்டுவது என்பதை கம்யூனிஸ்ட்டுகள் செய்வதில்லை. ஆனால், அன்புத் தோழர் நல்லகண்ணு அவர்கள் கம்யூனிஸ்ட் கொள்கையில் உறுதியாக நின்று 100 ஆண்டு காலம் இந்த மக்களுக்காகவும், நாட்டிற்காகவும் உண்மையாக, நேர்மையாகப் போராடிக் கொண்டிருக்கிற, உதாரணமாக வாழ்ந்து கொண்டிருக்கிற தலைவர் தோழர் நல்லகண்ணு அவர்கள் தனது 18 ஆவது வயதில் 1943 ல் கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு..தேச விடுதலைக்காகவும், உழைக்கும் மக்கள் விடுதலைக்காகவும் போராடினார், நாடு விடுதலையான பிறகு கம்யூனிஸ்ட் கட்சி தடைசெய்யப்பட்டது.. தோழர் அவர்கள் 1949 ல் கைது செய்யப்பட்டு பல்வேறு சித்திரவதைகளுக்குள்ளானார். 7 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார். சாதிய ஒடுக்குமுறைக்கெதிராகத் தொடர்ந்த போராடிக் கொண்டிருக்கிறார். .கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டில்.. தோழர் நல்லகண்ணு அவர்களின் பிறந்தநாளில் உறுதி ஏற்போம்..பாசிச ஆட்சியை வீழ்த்தி..வர்க்க போராட்டத்தைத் தீவிரப்படுத்தி.. இடதுசாரிகள் இணைந்து இந்தியாவில் புதிய ஜனநாயக புரட்சியை நடத்திக் காட்டுவோம்” என்று கூறினார்

## பண்பாட்டு பேரறிஞர் தொ.ப. மற்றும் மார்க்சிய லெனினிய சிந்தனையாளர் சங்கரநாராயணன் நினைவேந்தல் - 31.12.2024 - நெல்லை



# அமித்ஷா ஏன் அம்பேத்கருக்கு அஞ்சுகிறார்?

இந்தியா ஒரு இந்து ராஜ்யமாக இருக்க வேண்டும்; அதற்கு மனுஸ்மிருதி அரசமைப்புச் சட்டமாக இருக்க வேண்டுமென்று சங்கிப்படைகள் எப்போதுமே விரும்பின. அம்பேத்கர் இந்திய அரசமைப்புச்சட்ட வரைவுக்கமிட்டிக்கு தலைமை தாங்கினார். அது, இந்தியாவின் குடிமக்கள் அனைவருக்கும் நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்தை வழங்கும் உறுதிப்பாடு கொண்ட இறையாண்மை உள்ள சோசலிச மதச்சார்பற்ற ஜனநாயக குடியரசு இந்தியா என்று பிரகடனம் செய்த அரசமைப்புச்சட்டத்தை வழங்கியது. ஆனால், அரசமைப்புச்சட்டம் இறுதி செய்யப்படுவதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பே அம்பேத்கர், மனுஸ்மிருதி சமூக அடிமைத்தனத்திற்கான இந்தியாவின் சட்டம் என்று கூறி அதை பகிரங்கமாக நிராகரித்தார், எரித்தார். ஆகவே, தவிர்க்க முடியாமல் சங்கி-பாஜக படைக்கு அம்பேத்கர் மீதும் அவரது மரபு குறித்தும் வெறுப்பைத்தவிர வேறெதுவும் இருக்க வாய்ப்பில்லை. அம்பேத்கர் குறித்த அமித்ஷாவின் சமீபத்திய மாநிலங்களவை பேச்சு, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் சிற்பி குறித்த சங்கிகளது பெருவெறுப்பை விடவும் கூடுதலான வெறுப்பை வெளிப்படுத்தியிருக்கிறது.

இப்போதுள்ள அரசமைப்புச் சட்டத்தின் கீழ் இயங்குவதுவரை, அம்பேத்கர் பற்றி உதட்டளவில் உச்சரிப்பதைத் தவிர வேறு வழி இல்லை என்பது பாஜகவுக்கு முற்ற முழுக்கத் தெரியும். உண்மையில், அது அம்பேத்கர் சிலைகள் சிலவற்றை ஏற்படுத்தியும் அவரது நினைவையும் மரபையும் பாதுகாப்பது என்ற பேரால் சில நினைவகங்களை உருவாக்கி அம்பேத்கரை அபகரிக்க முயன்றும் வருகிறது; இன்னும் சொல்லப்போனால் வெறுப்பு, பொய்கள் எனும் அதன் பாசிச நிகழ்ச்சிநிரலுக்கு உதவும் விதம் கூட அவரது பெயரை வெட்கமின்றி பயன்படுத்தியும் வருகிறது. ஆனால் அரசமைப்புச் சட்டம், பாசிச எதிர்ப்பில் பரந்துபட்ட வெகுமக்கள் அணிதிரட்டலுக்கான ஆற்றல்மிக்க ஆயுதமாக முன்னெழுந்ததை அடுத்து, முதலில் குடியுரிமை திருத்தச்சட்ட எதிர்ப்புக் கிளர்ச்சிகளின் போதும், பின்னர் 2024 மக்களவைத்தேர்தலின் போதும், அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை நமது காலத்தின் கொள்கை அறிக்கையாக மாறியதை அடுத்து பாஜகவின் ‘அம்பேத்கரை அகற்றும்’ திட்டம் தரைதட்டிப் போனது. இதன்காரணமாக, எரிச்சலடைந்துபோன அமித்ஷாவால் அவரது வெறுப்பை மூடிமறைத்துக் கொள்ளமுடியவில்லை, அவரது ‘மனதின் குரல்’ நாடாளுமன்றத்திலேயே வெளிப்பட்டுவிட்டது.

மக்களால்மீண்டும்மீண்டும்நினைவூட்டப்படும், அம்பேத்கர், அரசமைப்புச்சட்டம் குறித்து அமித்ஷா, பாஜகவின் ஆழமான மனச்சங்கடத்தை மட்டும் வெளிப்படுத்தவில்லை; இதன் போக்கில் சங்கிகளின் மனுவாத மனநிலையையும் நிகழ்ச்சி நிரலையும்கூட வெளிப்படுத்தியிருக்கிறார். அம்பேத்கரை அடிக்கடி கூறுவோரை கிண்டல் செய்யும் விதமாக, அம்பேத்கர் பெயரை அடிக்கடி உச்சரிப்பதற்கு பதிலாக ஆண்டவன் பெயரை உச்சரித்தால் அவர்கள் ஏழ்பிறப்பும் நீங்கி ( ஏழேழு பிறப்பிற்கும்) சொர்க்கத்தில் நிச்சயமாக ஒரு இடத்தைப் பெறமுடியும் என்று கூறினார். அடுத்த பிறவியில் சொர்க்கத்தில் நிச்சயமான ஒரு இடம் உண்டு என்ற வாக்குறுதியானது, ஏமாற்றப்பட்ட மக்களைப் பார்த்து உங்களுக்கு இந்தப் பிறவியில் நரகம்தான் என கண்டனம் செய்வதாகும். இதுநாள் வரையிலும் மறுபிறவி என்ற பேரால், சாதி முறையும் இன்னபிற அநீதிகளும் எப்போதுமே நியாயப்படுத்தப்படுகின்றன; சாமான்ய மக்களின் மத நம்பிக்கைகள் கேடாகப் பயன்படுத்தப்படுகின்றன.

அம்பேத்கர் தன் வாழ்நாள் முழுவதும், சாதி, பால் ஒடுக்குமுறை தளைகளில் மக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்க மதத்தை தவறாக பயன்படுத்தி வந்ததை எதிர்த்துப் போராடி வந்தார். இங்கே, இப்போதே ஒடுக்கப்பட்டோருக்கு நீதி, சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவத்தைப் பெற்றுத்தருவதே அம்பேத்கரின் ஒரே அக்கறையாக இருந்தது. இங்குதான் அம்பேத்கரை அதீதமாக உச்சரிப்போரை குற்றம் சுமத்தும் வகையில் கேலிபேசும் விதமாக அமித்ஷா, சொர்க்கம், மறுபிறப்பு என்ற கருத்துகளை அழைக்கிறார்! அம்பேத்கரை அடிக்கடி அழைக்கும் இந்த மக்கள் யார்? இவர்கள் முதன்மையாக இந்தியாவின் ஒடுக்கப்பட்ட, வறுமையில் வாடும், பெரும்பான்மை மக்கள்; இவர்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்திலும் பிழைத்திருப்பதற்காகவும் கவுரவத்துக்காகவும் போராடிக் கொண்டிருப்பவர்கள். வாழ்வா தாரத்தை ஈட்டிக்கொள்வது தொடங்கி ஏதோ ஓரளவான இட ஒதுக்கீடு, பிரதிநிதித்துவம் பெற்றுக்கொள்வதுவரை, அவையாவும் அரசமைப்புச் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள

உரிமைகளுக்கான போராட்டமும் அறுதியிடலும் இல்லாமல் வரவில்லை.

அமித்ஷாவின் காணொலி துணுக்கு சூழல் பொருத்தத்திலிருந்து திசைதிருப்பப்பட்டு விட்டதாக கூறுகிறார். பாபாசாகேப் அம்பேத்கரை அவதூறாக பேசிய அமித்ஷாவின் அந்தக் கருத்தைத் தொடர்ந்து விஷமத்தனமான முயற்சியாக அம்பேத்கரை நேருவுக்கு எதிராக நிறுத்தவும் நேருவின் அமைச்சரவையிலிருந்து அம்பேத்கர் விலகியதற்கு காங்கிரஸ்தான் பொறுப்பாளி என்றும் பேசியுள்ளார். இது, அம்பேத்கரது பதவி விலகலுக்கான சூழ்நிலை குறித்த அப்பட்டமான பொய்யாகும். நேரு அரசாங்கத்துடனும் காங்கிரசுடனும் சில பிரச்சனைகளில் அம்பேத்கர் தனது மாறுபாடுகளை எழுப்பியிருந்தபோதும், 1952 தேர்தலுக்கு முன்பாக இந்து சட்டத்தொகுப்பு மசோதாவைக் கைவிடுவதென நேரு எடுத்த முடிவே அம்பேத்கரது பதவி விலகலைத் தூண்டியது. இந்து சட்டத்தொகுப்பு மசோதாவின் உள்ளடக்கம் குறித்தும் இந்துப் பெண்களிடையே சமநிலையையும் நீதியையும் கொண்டுவர இது அவசரமாக சட்டமாக்கப்பட வேண்டியதின் அவசியம் குறித்தும் நேரு, அம்பேத்கர் கருத்தோடு முழுமையாக உடன்பாடு கொண்டிருந்தார். ஆனாலும் இந்த மசோதாவுக்கு எதிராக நாடாளுமன்றத்திலும் சமூகத்திலும் எழுந்த பெரியளவிலான எதிர்ப்பின் காரணமாக இந்த மசோதாவை காப்பாற்றுவதற்காக இதை கைவிடுவதும், தள்ளிப்போடுவதும் ஒரு செயல்தந்திர கட்டாயமாக ஆகிப்போனது.

இந்து சட்டத்தொகுப்பு மசோதாவுக்கு கடுமையான எதிர்ப்பை தலைமைதாங்கி நடத்தியது யார்? முதன்மையாக, ஆர்எஸ்எஸ் ஹிந்து மகாசபாவால் வழிநடத்தப்பட்ட இந்துத்வா படைகள்தான் எதிர்ப்பு தெரிவித்தன; நாடுமுழுவதும் வெறித்தனமான எதிர்ப்பை விசிறிவிட்டது, மசோதாவை தீயிட்டு எரித்தனர்; அம்பேத்கர், நேருவின் கொடும்பாவிகளைக் கொளுத்தினர். காந்தி படுகொலையை அடுத்தும் இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சர் சர்தார் பட்டேல் ஆர்எஸ்எஸ் அய் தடைசெய்து அறிவித்திருந்ததாலும் படுமோசமாக தனிமைப்பட்டுப் போயிருந்த இந்துத்துவாப் படைகள், இந்து மசோதாவுக்கான பழமைவாத எதிர்ப்பை பயன்படுத்திக்கொண்டு மீண்டு எழ ஒரு வாய்ப்பாக இந்து சட்டத்தொகுப்பு மசோதாவைக் கண்டு கொண்டது. மசோதா திரும்பப் பெறப்பட்டதானது, ஆர்எஸ்எஸ், இந்து மகாசபா, ஜனசங் இவற்றின் நிகழ்ச்சி நிரலை களவாடியது, இந்தியாவின் முதல் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் 364 இடங்களையும் இடது-சோசலிஸ்ட்கள் 34 இடங்களையும் பெற்றிருக்க அவர்கள்(ஜனசங், இந்து மகாசபா) ஏழு இடங்களுக்கு மேல் பெற முடியவில்லை. தேர்தல் முடிந்தது, மசோதாவை நான்கு தனித்தனிச் சட்டங்களாக அரசாங்கம் நிறைவேற்றியது.

இந்து சட்டத்தொகுப்பு மசோதாவை திரும்பப் பெற்றது தொடர்பாக அம்பேத்கரது பதவி விலகலானது, முற்போக்கான சமூக சீர்திருத்தத்திற்கும் பால்நீதி நடவடிக்கைகளுக்கு உக்கிரமான பழமைவாத எதிர்ப்புக்கு எதிரான வெளிப்படையான நிலைப்பாடு, எதிர் அழுத்தத்தின் வெளிப்பாடு. பெண்கள் அதிகாரப்படுத்தல் எனும் அவசரக் கடமைக்கு அம்பேத்கர் அளித்த முக்கியத்துவத்தைக் காட்டுகிறது. பார்ப்பனிய ஆணாதிக்கத்தை தோற்கடித்து, சாதியை அழித்தொழிக்கும் பாதையானது பால் நீதி இல்லாமல் சமூக நீதி முழுமைபெறாது என்பதை நமக்குச் சொல்லுகிற அவரது வழியாகவும் இருந்தது. சமூக நீதி நிகழ்ச்சி நிரலானது அதன் சாரமான மாற்றம், சமத்துவத்துக்கான அழுத்தம் திட்டமிட்ட ரீதியில் களவாடப்பட்டு வெறும் சமூக பொறியியலுக்கான, இருப்பதைக் கட்டிக்காக்கும் நடவடிக்கையாக மாறிப்போயுள்ள சமயத்தில், பெண்கள் உரிமைக்கான அம்பேத்கரது பேரார்வமும் சமூக சமத்துவத்துக்கான போராட்டத்தில் பால்நீதிக்கு அவரளித்த கவனக்குவிப்பையும் நாம் கிரகித்துக் கொள்ள வேண்டும்.

மோடி அரசாங்கமும் ஒட்டுமொத்த சங்கிப்படைகளும் அமித்ஷாவுக்காக வரிந்துகட்டிக் கொண்டு இறங்கியுள்ளன; உண்மையான பிரச்சனையிலிருந்து மக்களை திசைதிருப்புவதற்காக, ராகுல்காந்தி பாஜக நாடாளுமன்ற உறுப்பினர்களை தாக்கிவிட்டாரென்று சொல்லப்படும் வழக்குப் பதிந்திருக்கிறது. இது, அம்பேத்கர், அரசமைப்புச் சட்டம் குறித்து கையும் களவுமாக பிடிபட்டுவிட்ட சங்கி-பாஜக முகாமில் ஏற்பட்டுள்ள அச்சத்தையே காட்டுகிறது. அம்பேத்கர் குறித்த அவர்களது வெறுப்புக்கும் அரசமைப்புச்சட்டம், நாடாளுமன்ற ஜனநாயகம் மீதான அவர்களது தாக்குதலுக்கும் பதிலளிக்கும் விதமாக, அம்பேத்கரது முற்போக்கு மரபை பற்றிக்கொள்ளவும் புதுப்பிக்கப்பட்ட வீரியத்துடனும் தீர்மானகரமாகவும் சமூக சமத்துவத்துக்கான போராட்டத்தை நாம் தீவிரப்படுத்தியாக வேண்டும்.

**–லிபரேஷன் தலையங்கம்: ஜனவரி 2025**

**தமிழாக்கம் – பாசு**

# தமிழ் சினிமாவில் “வசந்தத்தின் இடிமுழக்கம்”




எளிய, கிராமப்புர பின்புலத்தைக் கொண்ட இளைஞர் குமரேசன். காவல்துறையின் கடைநிலை ஊழியர். ரயில்வண்டிக்கு குண்டு வைத்தவர்களாக அறியப்படும் தமிழர் மக்கள் படையின் தலைவர் பெருமாள் வாத்தியார். ‘கோஸ்ட்’ எனப்படும் பெருமாள் வாத்தியாரை பிடிக்க காவல்துறையினர் முகாமிட்டுள்ள மலைப்பகுதிக்கு மாற்றலாகி பணியாற்ற வருகிறார் குமரேசன். மலைவாழ் மக்களோடு எளிதாகப் பழகுகிறார். மலைவாழ் மக்களின் துன்பங்களில் உதவி செய்யும் மனித நேயமிக்கவராகவும் உள்ளார். அதனால் உயரதிகாரியிடம் பகை ஏற்படுகிறது. கடும் தண்டனைக்கு ஆளாகிறார். ஆனாலும் தான் தவறு செய்யவில்லை எனக்கூறி மன்னிப்பு கேட்க மறுக்கிறார்.

விடுதலை-1 திரைப்படம் முழுவதும், அழுகி சீழ் பிடித்த, “ஈரல் முழுவதும் கெட்டுப்போன” காவல்துறை அம்பலமாகியுள்ளது. மனதில் அறவே ஈரமில்லாத காவல்துறையின் அதிகாரப் படி நிலையின் பல அடுக்குகளில் சதியும், பழிவாங்குவதும் அன்றாட நடைமுறையாக நிலவுகிறது. ஏழை, எளிய மக்கள் மீது வரைமுறையற்ற வன்முறையை, கண்மூடித்தனமாக கட்டவிழ்த்து விடுகிறது. மலைவாழ் மக்களை, பெண்கள் உட்பட, அடித்து, உதைத்து நிர்வாணமாக்கி அவர்கள் மீது ஈவிரக்கமற்ற ஒடுக்குமுறையை ஏவுகிறது காவலதுறை. எளிய மக்களைக் கொன்று அவர்களது சடலத்தை தீயிட்டுக் கொளுத்துகிறது. அதனை வெளி உலகத்துக்கு தெரியாமல் மறைக்கிறது. காவல்துறைக்குள்ளும் அரசு அதிகாரத்தின் உயர்ந்த மட்டத்திலும் நிலவுகிற அதிகாரப் போட்டியும் அம்பலமாகிறது. குமரேசனுக்கும் மலைக்கிராமத்தின் தமிழரசி என்ற பாப்பாவிற்கும் இடையே வெகு இயல்பாக காதல் மலர்கிறது. இருவரும் திருமணம் செய்து கொண்டு மகிழ்ச்சியாக வாழலாம் என நினைக்கிறார்கள். இந்த காட்சிகள் கவித்துவமாக மிளிர்கிறது. தமிழரசி குடியிருக்கும் மலைக் கிராமத்தின் பகுதியில் பெருமாள் வாத்தியார் மறைந்து கொண்டிருப்பதாக காவல்துறையினருக்கு தகவல் கிடைக்கிறது. அதனால் அந்த கிராமத்து மக்களை இழுத்துக் கொண்டு வந்து சித்திரவதை செய்கிறது காவல்துறை. தனது காதலியை காப்பாற்ற அதிகாரிகளிடம் கெஞ்சிக் கதறி முறையிடுகிறார் குமரேசன். அதிகாரிகளின் கல் நெஞ்சம் இளக மறுக்கிறது. அந்த மலைப்பகுதியில் உள்ள கனிம வளங்களை எடுக்க தனியார் பன்னாட்டு நிறுவனம் விரும்புகிறது. அதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்க துணைபோகிறது அரசு. அதனால் அந்தப் பகுதிக்கும் மக்களுக்கும் ஏற்படப் போகும் சீரழிவைத் தடுக்க நினைக்கிறது தமிழர் மக்கள் படை. ஆனால் பெருமாள் வாத்தியாரை தீவிரவாதியாக சித்தரிக்கிறது அரசு. இப்படியாக, இயற்கை வளங்களை தனியார் கார்ப்பரேட் நிறுவனங்கள் கொள்ளையடித்து, கொள்ளை லாபமீட்டத் துணை போகும் அரசு; ஏழை, எளிய மலைவாழ் மக்களின் நிலங்களை, வாழ்வாதாரங்களை ஒழித்து கட்டப் பாடுபடுகிறது. மக்களுக்கு ஆதரவாகப் போராடும் இயக்கங்களை, அதன் தலைவர்களை தீவிரவாதிகளாக, பயங்கரவாதிகளாக சித்தரிக்கும் அரசு, காவல்துறையின் பலத்தை கொண்டு அவர்களை வேட்டையாடுகிறது அரசு. இவையனைத்தையும் தெள்ளத் தெளிவாக காட்சிப் படுத்தியுள்ளார் இயக்குனர் வெற்றிமாறன்.

விடுதலை- 2 திரைப்படம், சாணிப்பால், சவுக்கடி போன்ற சாதிய ஒடுக்குமுறைகள், கூலி உள்ளிட்ட பொருளாதார ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும், தொழிலாளர் உரிமைகளுக்காக, அவர்களது கண்ணியத்திற்காக, கம்யூனிஸ்டுகள் முன்னின்று எதிர்த்து போராடிய வரலாற்றை அழுத்தமாக பதிவு செய்துள்ளது. ஒடுக்கப்பட்ட சாதியினர், விவசாயக் கூலிகள் மீது பண்ணையார்களின் ஒடுக்குமுறை காட்சியாக்கப்பட்டுள்ள விதம் மனதைக் கலங்கச் செய்கிறது. விவசாயத் தொழிலாளர்களையும்

ஆலை தொழிலாளர்களையும் அமைப்பாக்க கம்யூனிஸ்டுகள் தங்கள் உயிரைத் துச்சமென நினைத்து, அனேக இன்னல்களை எதிர்கொண்டு, உடைமைகளையும் உயிரையும் தியாகம் செய்ததும் சிறப்பான முறையில் காட்சியாக்கப்பட்டுள்ளது. இதை கேகே என்ற பாத்திரம் மூலம் இயக்குனர் கூறியுள்ளார். கேகே ஒரு முழு நேர கம்யூனிஸ்ட் செயல்பாட்டாளர். "நல்லவங்களா இருந்தா மட்டும் இந்த சமூகத்துல எந்த மாற்றத்தையும் நிகழ்த்திட முடியாது அதுக்கு கோட்பாடும் அமைப்பும் தேவை." என பெருமாள் வாத்தியாருக்கு அரசியல் கல்வி கற்பிக்கிறார். ஒடுக்கப்பட்ட சாதி மக்கள் மத்தியில் செங்கொடியேற்றி விட்டு உரையாற்றும் போது "யாராவது உங்களை டேய்னு கூப்பிட்டா, என்னடான்னு கேளுங்க" என உத்வேகம் ஊட்டுகிறார். எளிமையானவராகவும் கொள்கையில் பற்றுறுதி கொண்டவராகவும் மன உறுதி மிக்கவராகவும் சிறந்த கம்யூனிஸ்டுக்கான உருவகமாக கேகேயின் பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. திரைப்படத்தின் ஆரம்ப காட்சிகளில் விவசாயக் கூலித் தொழிலாளர்களின் இளம் பெண்கள் மீது பண்ணையார்கள் நிகழ்த்திய "பின்வாசல்" முறை என்ற கொடுமையின் கொடூரம் கண்முன்னே விரிகிறது. கருப்பனாக கென் கருணாஸும் பண்ணையாராக போஸ் வெங்கட்டும் இக்காட்சிகளில் சிறந்த நடிப்பை கொடுத்திருக்கிறார்கள். கம்யூனிச தத்துவம் வருவதற்கு முன்பே சாதிய கொடுமைகளுக்கு எதிராக சமூகத்தில் எதிர்ப்புணர்வு இருந்திருக்கிறது. இந்தியாவில் கம்யூனிச தத்துவம் எழுச்சி பெறுவதற்கு பிறகாரணிகளோடு இணைந்து இதுவும் உத்வேகம் கொடுத்துள்ளது. பெருமாள் வாத்தியார் கம்யூனிஸ்டாக உருமாறுவதற்கான உந்துதல் இதுவே எனக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. விடுதலை 2 திரைப்படத்தில் பெருமாள் வாத்தியாருக்கும் பண்ணையாரின் மகள் மகாலட்சுமிக்கும் இடையே காதல் மலர்கிறது. மகாலட்சுமியின் பாத்திரம் புரட்சிகரமாக படைக்கப்பட்டுள்ளது. வழக்கமான தமிழ் திரைப்படங்களில் காட்டப்படுவது போல, பெண்களை பாலிச்சை காட்சிப் பொருளாக காண்பிப்பதற்கு முற்றிலும் மாறாக, பாரதி சொன்ன நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பார்வையுமான புதுமைப் பெண்ணாக, பெரியார் அறிவுறுத்தியபடி ஆண்கள் போல உடையணிந்து, தலைமுடியை வெட்டிக் கொண்ட, புரட்சிகர சிந்தனை கொண்ட பெண்ணாக மகாலட்சுமி வலம் வருகிறார். தன்னைப் பார்க்கும் ஒவ்வொருவரும் தன்னிடம் கேட்கும் முதல் கேள்வி ஆண்கள் போல தலைமுடியை வெட்டியிருப்பதன் காரணத்தையே என பெருமாள் வாத்தியாரிடம் மகாலட்சுமி கூறும்போது, "ஒங்க முடி, நீங்க வெட்டியிருக்கீங்க. இதுல நான் கேக்குறதுக்க என்ன இருக்கு" என்ற வசனத்தின் மூலம் கம்யூனிஸ்டுகள் பெண்களின் சுதந்திரத்தை எந்தளவு மதிக்கிறார்கள் என வெளிப்படுகிறது. மகாலட்சுமி வறுமை தின்னும் குடும்பச் சுமையில் தடுமாறுவதும் காட்டப்பட்டிருக்கிறது. மக்கள் போராளிகளிடையே ஏற்படும் வழிமுறை முரண்பாடுகளும் கருத்து முரண்பாடுகளும் கூட சினிமா மொழிக்குள் வந்திருப்பது வியப்பு! கேகேவிற்கும் பெருமாள் வாத்தியாருக்குமான முரண்பாட்டின் வழியாக அதைக் கூற முயற்சித்துள்ளார் இயக்குநர். அதன் தொடர்ச்சியாக நக்சல்பாரி இயக்கங்களுக்குள் எழுந்த கருத்துமாறுபாடுகளையும் படம் நினைவுபடுத்துகிறது. "மக்களே போராட்டக் களத்துக்கு ஏற்ப ஆயுதங்களை எடுத்துக் கொள்ள வேண்டும். அது அவர்கள் செலுத்தும் வாக்குச் சீட்டாகவும் இருக்கலாம்" என பெருமாள் வாத்தியார் வழியாக வெகுமக்களே நாயகர்கள் என்று உணரவைக்கப் படுகிறது. திரைநாயகர்கள் அரசியல் நாயகர்களாக வலம் வந்த, வலம் வரும் தமிழ்நாட்டில் களநாயகர்களை சினிமாவில் நாயகர்களாக காட்சிப்படுத்தியுள்ள வெற்றிமாறன் துணிச்சல் தமிழ் சினிமாவுக்கு புதிது. அவரது முந்திய படங்களின் வளர்ச்சி என்றும் கூறலாம்.

கதிரேசனாக சூரி, பெருமாள் வாத்தியாராக விஜய் சேதுபதி, மகாலட்சுமியாக மஞ்சுவாரியார் உள்ளிட்ட பலரும் தங்கள் நடிப்பால் திரைப்படத்தை மெருகேற்றியுள்ளனர். இளையராஜாவின் இசையும் வேல்ராஜின் கேமராவும் மனதை மயக்குகின்றன. விடுதலை -1 இன் வழிநெடுக காட்டுமல்லி, விடுதலை 2 இன் மனசுல பாடல்கள் மனதை கொள்ளை கொள்கின்றன. ஒட்டு மொத்தத்தில் பார்த்தால் அண்மைய கால தமிழ் திரைப்பட வரலாற்றில் கம்யூனிச இயக்கம் குறித்த ஒரு குறிப்பிடத்தக்க பதிவை விடுதலை திரைப்படம் செய்துள்ளது. ஆட்சியாளர் பக்கம் நின்று அமரன் பேச, மக்கள் பக்கம் நின்று விடுதலை பேசுகிறது.

**-செந்தில்**

**20ம் பக்கத் தொடர்ச்சி....**

(வக்ஃப் வாரியங்களை) இடித்து தள்ளும் மதவெறி திட்டத்தில் துரோகம் நிறைந்துள்ளது. தெரிந்தவரையில் பொதுமக்கள், அரசு அதிகாரிகளின் சமர்ப்பித்தல்களை உறுப்பினர்கள் ஆராய்வதற்குரிய போதுமான கால அவகாசம் வழங்காமல் இருக்க, இந்தக் கூட்டு நாடாளுமன்ற கமிட்டி வாரத்திற்கு இருமுறை மட்டுமே கூட்டப்படுகிறது.

இந்தக் கூட்டு நாடாளுமன்ற கமிட்டி பங்குதாரர்கள், சம்பந்தப்பட்ட குடிமக்களின் பதிலை தெரிந்து கொள்ள அதிக நேரம் கொடுக்க வேண்டும். திருத்த மசோதா 2024 அதன் தற்போதைய வடிவத்திலிருந்து திரும்பப் பெறப்பட வேண்டும். தற்போதைய சட்டத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் பரந்த கலந்தாலோசனையின் அடிப்படையில் சச்சார் கமிட்டி விரும்பியது போல, வக்ஃப் சொத்துகள் நிர்வகிக்கப்படுவதை வலுப்படுத்துவதாகவும் மேம்படுத்துவதாகவும் இருக்க வேண்டும் என நாங்கள் உறுதியாக எண்ணுகிறோம்.

# திருப்பூர்-கோவை தொழிலாளர்களுடன் சிபிஐ(எம்எல்) நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் சுதாமா பிரசாத் சந்திப்பு.




27.12.24 அன்று, சிபிஐ(எம்எல்) கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் சுதாமா பிரசாத் அவர்கள் திருப்பூர் பனியன் தொழிலாளர்கள், சுமைப்பணி தொழிலாளர்கள் சங்க நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர் சந்திரமோகன், மாநில செயலாளர் பழ. ஆசைத்தம்பி, மாநில நிலைக்குழு உறுப்பினர் பாலசுப்பிரமணியன், திருப்பூர் மாவட்டச் செயலாளர் முத்து ஆகியோர் நிகழ்ச்சியில் உரையாற்றினர்.

மாநிலக் குழு உறுப்பினர்கள் கரூர் ராமச்சந்திரன், அதியமான், மாவட்டக் குழு தோழர்கள் ஊத்துக்குளி முத்து, பேச்சி முத்து, சுமைப்பணித் தொழிலாளர் சங்க செந்தில்குமார், பனியன் சங்கப் பொறுப்பாளர் சரவணன், மாணிக்கம், கட்டுமானத் தொழிலாளர் சங்க சௌந்தர்ராஜன், AICCTU மாநிலக்குழு உறுப்பினர் முருகன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

தோழர் டார்வின், பீகார் புலம்பெயர் தொழிலாளர் கணேஷ், நாகமாணிக்கம், முத்து உள்ளிட்டவர்கள் திருப்பூர் பனியன் தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து விரிவாகப் பேசினார்கள். 20 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை ஒப்பிட்டால், தற்போது சங்கங்கள் எதுவும் செயல்படவில்லை. பீஸ் ரேட் முறை கூலியை குறைத்து தொழிலாளர்களுக்கு விரோதமாக இருக்கிறது; தொழிலாளர் வாழ்க்கையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. பீஸ் ரேட் முறையில் கூலி குறைப்பால் உழைப்பு சுரண்டப்படுவதை பற்றி புலம்பெயர் தொழிலாளர்களும் பேசினார்கள்.

தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் அவுட் சோர்சிங் மூலம் தொழிலாளர்கள் சுரண்டப்படுவது பற்றி தோழர் செந்தில்குமார் பேசினார்.

திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் சங்க பொறுப்பாளர்கள் தோழர் நிக்கோலஸ் தோழர் நாகமாணிக்கம், ஆலடி அணை நீர் திட்டம் பற்றி பேசினர்.

பல்வேறு சாயப்பட்டறை கழிவுகளால், நொய்யல் ஆறு மாசடைவதால், இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாழாவது மற்றும் விவசாயிகள் வாழ்வாதாரம் பாதிப்படைவது பற்றியும் சௌந்தர்ராஜன் பேசினார்.

நிறைவாகப் பேசிய தோழர் சுதாமா பிரசாத் பீகார் மாநில அரா தொகுதிக்கு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த இந்தியத் தொழிலாளி வர்க்கத்துக்கும் குரல் எழுப்புவேன் என உறுதியளித்தார். "திருப்பூர் பனியன் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு, சொந்த வீடு, வேலை உத்தரவாதம், ஈஎஸ்ஐ, பிஎப் உரிமைகளை பெறுவதற்கு, பிற இடதுசாரி தொழிற்சங்கங்களுடன் இணைந்து போராட்டத்தை முன்னெடுப்போம்" என்றும், "அவர்களுடைய கோரிக்கைகளை இடதுசாரி எம்பி களுடன் இணைந்து நாடாளுமன்றத்தில் எழுப்புவேன்" எனவும் உறுதி கூறினார்.




பிரிக்கால் தொழிலாளர்கள் உரிமை களுக்காக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நடத்தியப் போராட்டத்தில் முன்னணிப் பங்காற்றியதற்காக பழிவாங்கப்பட்டு, ஆயுள் தண்டனையில் கோவை சிறையில் இருக்கும் பிரிக்கால் தொழிலாளி மணிவண்ணன் அவர்களை மாலை 5 மணியளவில், கட்சி மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி மற்றும் கோவை மாவட்டச் செயலாளர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் சந்தித்தனர்.

**கோவையில் தூய்மை பணியாளர்கள் உடன் சந்திப்பு :-**

மாலை 6 மணியளவில், "ஒப்பந்தத் தூய்மை பணியாளர்கள் மற்றும் உழைக்கும் மக்கள் நலன் குறித்த" கலந்துரையாடல் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் சுதாமா பிரசாத், பழ.ஆசைத்தம்பி, பாலசுப்பி ரமணியன், பெரோஸ் ஆகியோருடன், தூய்மைப் பணியாளர்கள் தோழர்கள் சந்தானம், தமிழரசன், சிவக்குமார் அவர்களும், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் பிலோமினா, வள்ளி, தமிழரசி ஆகியோரும், மூத்த வழக்கறிஞர் தோழர் C.முருகேசன் அவர்களும், நூற்றுக்கணக்கான தூய்மை பணியாளர்கள், தொழிற்சங்க முன்னணிகளும் கலந்து கொண்டனர்.

'குறைந்த கூலி, ஒப்பந்த தொழிலாளர்களாக சுரண்டப்படுதல், அவர்களின் பணிநிரந்தரம்' என தூய்மைப் பணியாளர்கள் சந்திக்கும் பல்வேறு பிரச்சனைகள் குறித்து கவனமுடன் கேட்டறிந்த எம்பி தோழர் சுதாமா பிரசாத் அவர்கள், அது குறித்து நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்பதாக தெரிவித்தார்.

# இரயில்வே அங்கீகாரத் தேர்தலில் ஏஐசிசிடியு பெற்ற வெற்றிகள்!

இந்திய இரயில்வேத் துறையில் 2019லேயே நடைபெற்றிருக்க வேண்டிய தொழிற்சங்க அங்கீகாரத் தேர்தலை இரயில்வே துறை தள்ளிப்போட்டே வந்த நிலையில், டெல்லி உயர் நீதிமன்றத் தலையீடு காரணமாக சென்ற டிசம்பர் 4,5,6 தேதிகளில் நாட்டின் 17 மண்டலங்களிலும் 2 உற்பத்தித் தொழிற்சாலைகளிலும் அங்கீகாரத் தேர்தல் நடைபெற்றது.

கிழக்கு மத்திய இரயில்வே மண்டலத்தில் IREF / AICCTU உடன் இணைக்கப்பட்ட. கிழக்கு மத்திய இரயில்வே எம்பிளாயீஸ் யூனியன் 20,924 வாக்குகள் (33.53%) பெற்று ஒரே அங்கீகரிக்கப்பட்ட சங்கமாகவும், சில காலம் முன்பு IREFல் இணைக்கப்பட்ட வடகிழக்கு இரயில்வேயின் வடகிழக்கு இரயில்வே தொழிலாளர் காங்கிரஸ் 17,388 வாக்குகள் (49%) பெற்று ஒரே அங்கீகரிக்கப்பட்ட சங்கமாகவும் தொழிலாளர்களால் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இதுவல்லாமல் சமீபத்தில் IREF ல் இணைந்த அகண்ட் இரயில்வே கர்மாச்சாரி சங் என்ற சங்கம் தெற்கு மத்திய இரயில்வே மண்டலத்தில் 10,819 வாக்குகள் (27.9%) பெற்று இரண்டாம் இடம் பிடித்தது. மேற்கு மத்திய இரயில்வேயில், மேற்கு மத்திய இரயில்வே எம்ப்ளாயீஸ் யூனியன் 7,402 வாக்குகள் (16.47%) பெற்று மூன்றாம் இடம் பிடித்தது. மொத்தமுள்ள 17 மண்டலங்களில் 9 மண்டலங்களிலும், 2 உற்பத்தி தொழிற்சாலைகளிலும் IREF போட்டி யிட்டது.

AIRF என்ற அகில இந்திய ரயில்வே தொழிலாளர் கூட்டமைப்பில் இணைக்கப்பட்ட சங்கங்கள் 13 மண்டலங்களிலும் NFIR என்ற இந்திய தொழிற்சங்கங்களின் தேசிய கூட்டமைப்பில் இணைக்கப்பட்ட சங்கங்கள் 12 மண்டலங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. CITU தென்னக ரயில்வேயிலும் சித்தரஞ்சன் லோகோ ஒர்க்ஸ்ஸிலும் அங்கீகரிக்கப்பட்ட சங்கமாக வெற்றி பெற்றுள்ளது.

(பெற்ற வாக்குகளின் அடிப்படையில் சில மண்டலங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட சங்கங்கள் அங்கீகரிக்கபட்ட சங்கங்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளன)

**தொழிற்சங்க நடத்தை விதிகள் மூலம் தொழிற்சங்கங்கள் மீதான தாக்குதல்.**

அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கான நடத்தை விதிகள் மிகக் கடுமையானதாக,

-தொடர்ச்சி 17ம் பக்கம்

# இகக(மாலெ) மாநிலக் குழு கூட்டம் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்- முடிவுகள் :-



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் -லெனினிஸ்ட்) விடுதலை கட்சியின் மாநிலக்குழு கூட்டம் சேலத்தில் டிசம்பர் -28, 29, 2024 தேதிகளில் நடைபெற்றது.

அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் வீ.சங்கர், மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி, மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் பாலசுந்தரம், சந்திரமோகன், பாலசுப்பிரமணியன், மாநிலக்குழு உறுப்பினர்கள் ரேவதி, ஈஸ்வரி, கார்மல் உள்ளிட்ட மாநிலக் குழு உறுப்பினர்களும் கட்சியின் மாவட்டச் செயலாளர்களும் கலந்து கொண்டனர்.

மாநிலக் குழு கூட்டத்தில், இன்றைய தமிழ்நாடு அரசியல் சூழல் குறித்தும் ஒன்றிய பாஜக கூட்டணி அரசின் மக்கள் விரோத செயல்பாடுகள் குறித்தும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**டிசம்பர் 30: அமித்ஷாவைக் கண்டித்து இடதுசாரிகள் போராட்டம்**

- நாடாளுமன்றத்தில் அம்பேத்கரை இழிவுபடுத்தி பேசிய அமித்ஷாவை பதவி விலகக் கோரி, டிசம்பர் 30 ல் இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் -லெனினிஸ்ட் உள்ளிட்ட இடதுசாரி கட்சிகள் அகில இந்திய போராட்டத்தை தமிழ்நாட்டிலும் வெற்றிபெறச் செய்வதென கூட்டம் முடிவு செய்தது.

**ஒன்றிய மோடி அரசுக்கு கடும் கண்டனம்**

- ஒன்றிய பாஜக மோடி அரசாங்கம், 5, 8 ம் வகுப்புகளுக்கும் பொதுத் தேர்வை திணிப்பதை கூட்டம் வன்மையாக கண்டித்தது. இந்த முடிவை ரத்து செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் இந்த முடிவை செயல்படுத்த மாட்டோம் என்ற திமுக அரசின் அறிவிப்பைக் கூட்டம் வரவேற்றது.
- பாஜக ஒன்றிய அரசின் NEP - தேசியக் கல்வி கொள்கையை அமல்படுத்தவில்லை என்ற காரணம் காண்பித்து, தமிழ்நாடு அரசுக்கு வழங்க வேண்டிய பள்ளிக் கல்வி திட்ட நிதி ரூ. 2152 கோடி இதுவரையும் வழங்கப் படாததை கண்டிப்பதோடு; ஒன்றிய அரசால், நிறுத்தப்பட்ட கல்வி நிதியை உடனடியாக வழங்கிட வேண்டுமென்றும் கூட்டம் வலியுறுத்தியது.

**டங்க்ஸ்டன் எதிர்ப்புக் கிளர்ச்சி- மதுரை**

- மதுரை அரிட்டாபாடியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து மக்கள் நடத்திய தொடர் போராட்டங்களால் டங்ஸ்டன் ஏலத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்து ள்ளது. இது இடதுசாரிகள், மக்கள் போராட்டங்களுக்கு கிடைத்த வெற்றி எனக் கூட்டம் சுட்டிக்காட்டியது. ஆனால், கனிமவளங்களைஅனில் அகர்வால், அதானி போன்ற கார்ப்பரேட்கள் கொள்ளையடிக்க வழிவகுக்கும் "ஒன்றிய மோடி அரசின் கனிமங்கள் ஏலம் திருத்தச் சட்டம் 2023 அய்" உடனடியாகத் திரும்பப்பெற வேண்டும். இந்த கோரிக்கையை வலியுறுத்தி எமது கட்சி, மதுரை நகரில் வரும் ஜனவரி 21 அன்று பெருந்திரள் கிளர்ச்சி நடத்தவும் முடிவு செய்துள்ளது.

**பெண்களுக்கு பாதுகாப்பு; நீதி வேண்டும்**

- அண்ணா பல்கலைக்கழக மாணவி, பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு, செய்யப்பட்டுள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியளிக்கிறது. தமிழ்நாடு கல்வி நிறுவன வளாகங்கள் பெண் மாணவிகளுக்கு பாதுகாப்பற்ற, அச்சுறுத்தும் நிலைமை நிலவுவதை ஆழ்ந்த அதிர்ச்சியுடன் சுட்டிக் காட்டுகிறது. இது தொடர்பாக அரசும் முதலமைச்சரும் அமைதி காப்பது குறித்து கூட்டம் கண்டனத்தை தெரிவித்தது.
- இத்தகைய நிகழ்வுகள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு இழப்பீடுகள் வழங்குவதற்கு அப்பால், பெண்களின் அச்சமற்ற சுதந்திரத்தை உறுதி செய்திட வேண்டும். பெரியார் கைத்தடிக்கு மதிப்பளிக்கும் திராவிட மாடல் அரசு

இதை உறுதிசெய்ய வேண்டும். பெண்கள் அமைப்பின் தலைவர்கள், மேனாள் நீதித்துறை ஆளுமைகள் கல்வியாளர்கள் உள்ளிட்ட உயர்நிலைக் குழுவை ஏற்படுத்தி வர்மா கமிஷன் ஆணைய பரிந்துரைகளை தீவிரமாக செயல்படுத்திட வேண்டும். பொள்ளாச்சி பாலியல் குற்றவாளிகள் அவரது அரசியல் கூட்டாளிகளை சட்டத்தின்படி கடும் தண்டனை வழங்க வேண்டும். கனியாமூர் பள்ளி மாணவி சிறீமதி கொலை வழக்கு உள்ளிட்ட நீண்டகாலமாக நிலுவையிலுள்ள வழக்குகளை விரைந்து முடித்து குற்றவாளிகளுக்குவிரைந்து தண்டனை வழங்க பெண்கள் விரைவு நீதிமன்றங்களை அமைத்திட வேண்டும்.

- இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம், புரட்சிகர இளைஞர் கழகம், அகில இந்திய மாணவர் கழகம் நடத்தும் மாநிலம் தழுவிய கிளர்ச்சியை வெற்றிபெறச் செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

**கம்யூனிஸ்ட் கட்சி நூற்றாண்டு**

- டிச.26 2024ல் துவங்கியுள்ள இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் நூற்றாண்டு விழாவைக் கடைப்பிடிக்கும் வகையில், 2025 ஆண்டு முழுவதும் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்த முடிவு செய்யப்பட்டது.
- “இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் நூற்றாண்டை கொண்டாடும் விதமாக சாதனைகள், படிப்பினைகள், சவால்களை” பிரபலப்படுத்தும் வகையில் பொதுச் செயலாளர் திபங்கர் எழுதியுள்ள கட்டுரையை வெளியீடாகக் கொண்டுவருவது, எம்எல் இயக்க வரலாற்றையும் உட்கொண்ட கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றை தொகுப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது.

**அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்போம் இயக்கம்**

- 6 டிசம்பர் 26 துவங்கி சனவரி 26 வரை நடைபெறுகிற, “அரசமைப்புச் சட்டம் பாதுகாப்போம்; குடியரசை பாதுகாப்போம்” இயக்கத்தின் நிறைவாக, 2025 சனவரியில் மாநில அளவிலான நிகழ்ச்சி நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.
- கார்ப்பரேட் முதலாளித்துவ வளர்ச்சிப் பாதை காரணமாக கிராமப்புற, நகர்ப்புற ஏழை மக்கள், தொழிலாளர்கள் கூலி- வேலை-வீடு- வீட்டுமனை- வாழ்வாதாரப் பிரச்சினைகளைத் தொடர்ந்து எதிர்கொண்டு வருகின்றனர். எனவே, 2025ம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில், மக்கள் கோரிக்கைகள் மீது மாவட்ட மட்டங்களில், பெருந்திரள் மக்கள் அணிதிரட்டல்களை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**நீதிபதி சந்துரு அறிக்கையை வெளியிட வேண்டும்**

- தமிழ்நாட்டிற்கென்று தனிக் கல்விக் கொள்கை உருவாக்குவது என்று திமுக அரசு முடிவு செய்திருந்தது. நீண்டகாலமாகியும் கல்விக் கொள்கையை அறிவிக்கவில்லை. உடனடியாக உயர்நிலைக் குழுவின் அறிக்கையைப் பெற்று கல்விக் கொள்கையை அறிவிக்க வேண்டும்.
- கல்வி நிலையங்களில் சாதி வன்முறையை தடுத்து நிறுத்த மேனாள் நீதிபதி சந்துரு, ஒருநபர் குழு அளித்துள்ள அறிக்கையை இனியும் தாமதிக்காமல் உடனடியாக அரசு வெளியிட்டு குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்திட வேண்டும் என கூட்டம் வலியுறுத்தியது. இரண்டாண்டுகளுக்கு மேலாகியும் வேங்கைவயல் குற்றவாளிகள் கைது செய்யப்படாதது குறித்து கூட்டம் தனது அதிர்ச்சி யையும் கோபத்தையும் வெளிப்படுத்தியது. உடனடியாக குற்றவாளி களை கைது செய்யவேண்டுமென திமுக அரசை கூட்டம் வலியுறுத்தியது.
- திமுக அரசுக்கு எதிராக நடைபெறும் தொழிலாளர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், செவிலியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள் என பலதரப்பட்ட பிரிவினரின் போராட்டங்களில் பெரும்பா லானவை அதன் தேர்தல் வாக்குறுதிகளை மய்யமாகக் கொண்டே நடந்து வருகின்றன. ஒரு டிரில்லியன் (ரூ. 76 லட்சம் கோடி) டாலர் பொருளாதார வளர்ச்சி என்ற பேரிரைச்சலுக்குள் மூழ்கடிக்காமல் இவர்களுக்கு வழங்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளை ஸ்டாலின் அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென கூட்டம் வலியுறுத்தியது.

**மணிவண்ணன்; ராமமூர்த்தி விடுதலை.**

- அநீதியாக ஆயுள்தண்டனை வழங்கப்பட்டு 10 ஆண்டுகளாக சிறையிலுள்ள பிரிக்கால் தொழிலாளர் மணிவண்ணன், ராமமூர்த்தி இருவரையும் மேலும் 10 ஆண்டுகளுக்கு மேலாக சிறையிலுள்ள இஸ்லாமியர்களையும் திமுக தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் விடுதலை செய்ய வேண்டுமென கூட்டம் தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறது.
- கட்சியின் திருவள்ளூர் மாவட்டச் செயலாளர் தோழர் அன்பு கட்சிக் கொடி ஏற்றும் முயற்சியை தடுத்து நிறுத்தி வழக்குகள் போட்டுள்ள மாவட்ட அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகளைக் கூட்டம் வன்மையாக கண்டித்தது. வழக்குகளை ரத்து செய்ய வேண்டும் என்று கூட்டம் வலியுறுத்தியது.
- அதேபோல, வேலூர் மாவட்டச் செயலாளர் தோழர் சரோஜா அவர்கள், வேலூர் பேருந்து நிலையத்தில் முன்னுள்ள டாஸ்மாக் கடைகளை அப்புறப்படுத்தக் கோரி போராட்டத்தை நடத்தினார். பொதுமக்களுக்கு இடையூறான டாஸ்மாக் கடைகளை அகற்றுவதற்கு மாறாக, தோழர் சரோஜா மீது வழக்குகள் போட்டு சிறையிலடைத்ததை கூட்டம் வன்மையாக கண்டித்தது. தோழர் சரோஜா மீதும் மற்ற ஆறுபேர் மீதுமுள்ள வழக்குகளை திரும்பப் பெற வலியுறுத்துகிறது. மேலும் டாஸ்மாக்

கடைகளை மூடுவது குறித்த திமுக தேர்தல் வாக்குறுதியை அரசாங்கம் உடனடியாக நிறைவேற்றிட வேண்டும் என்றும் கூட்டம் வலியுறுத்தியது.

**உள்ளாட்சி தேர்தல்களை தள்ளிப்போடக் கூடாது**

- நிர்வாகக் காரணங்களைக் காட்டி உள்ளாட்சித் தேர்தல்களை தள்ளிப் போடக் கூடாது. அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து, அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஒரே சமயத்தில் தேர்தலை நடத்திட வேண்டும். நீண்டகாலமாக தேர்தல் நடத்தப்படாமல் இருக்கும் வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் உள்ளிட்ட கூட்டுறவு அமைப்புகளுக்கும் தேர்தல் நடத்திட வேண்டும்.

ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மேனாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மரணம் குறித்த இரங்கல் செய்தி!

டாக்டர் மன்மோகன் சிங் இதுவரையிலான காலகட்டத்தில் சிறுபான்மை மதத்திலிருந்து வந்த ஒரே பிரதமர் ஆவார். முதலில் பொருளாதார ஆலோசகராகவும் பிறகு பி.வி நரசிம்மராவ் ஆட்சியில் நிதி அமைச்சராகவும் இருந்த அவர், இறுதியாக ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கத்தின் பிரதமர் ஆனார். நேரு காலத்திய கூட்டுப் பொருளாதாரம் என்பதிலிருந்து திறந்த சந்தை நவ தாராளவாதமாகவும் அணிசேரா கொள்கையிலிருந்து ஐக்கிய அமெரிக்காவுடனான போர் தந்திரக் கூட்டாளியாகவும் இந்தியா மாற்றம் அடைவதை குறிக்கும் இரு பெரும் பொருளாதார மற்றும் வெளி உறவு கொள்கைகளில் பெரிய நகர்வை கொண்டு வருவதற்கு காரண கர்த்தாவாக இருந்தவர்.

இடதுசாரிகளின் குறிப்பிடத்தக்க ஆதரவுடன் இருந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் முதல் கட்ட ஆட்சியானது கார்ப்பரேட் சார்பு, செல்வந்தர்கள் சார்பு கொள்கைச் சூழலையே பெருவாரியாக கொண்டிருந்த போதும், வறிய மக்களுக்கு சில பாதுகாப்பு வலையங்களை ஏற்படுத்தும் கிராமப்புற வேலை உத்திரவாதச் சட்டம், வன உரிமைச் சட்டம் போன்ற அடுத்தடுத்த முற்போக்கான சட்டங்களையும் அது கண்டது. முரண்பாடான விதத்தில் மன்மோகன் சிங் ஆட்சியில் தான் குடிமக்கள் சார்பு தகவல் அறியும் உரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதே சமயம் அடுத்தடுத்து அவரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சிவில் உரிமைகளில் குறிப்பிடத்தக்க அரிப்பை ஏற்படுத்தி விட்டன. இந்திய அமெரிக்க அணு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின் அடுத்து இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்த போது, பாசிச மதவாத நஞ்சும் வன்முறையும் நாடு முழுவதும் பரவிக் கொண்டிருந்த போதும் கூட, மன்மோகன் சிங் அரசாங்கம் திருத்தப்பட்ட சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்திற்கும் (UAPA) சத்தீஸ்கரில் பசுமை வேட்டை திட்டத்திற்கும் தலைமை தாங்கியது. இந்தியாவின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு நக்சலிசம் மிகப்பெரிய அச்சுறுத்தல் என்று சிங் அவர்களே முத்திரை குத்தினார்.

பன்மைத்துவம், மதச்சார்பின்மை, கூட்டாட்சி ஆகிய அரசமைப்புச் சட்ட கொள்கைகளை உறுதியாக முன்னெடுத்துச் சென்ற பிரதமராகவும் நாடு நினைவில் கொள்ளும். டாக்டர் மன்மோகன் சிங் குடும்பத்தாருக்கும், அவருடைய நண்பர்களுக்கும், அபிமானிகளுக்கும சிபிஐ(எம்எல்) மனமார்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

**பக்கம் 14ன் தொடர்ச்சி...**

ஒருதலைப்பட்சமானதாக உருவாக்கப்பட்டுள்ளன. விதி 5.8 ஆனது கூட்டுப் பேர உரிமையை பெருமளவுக்கு வெட்டிக் குறைப்பதாக உள்ளது. விதிப்படி வேலை, ஒட்டுமொத்த மருத்துவ விடுப்பு, சில வகை வேலை நிறுத்தங்களில் தொழிற்சங்கங்கள் ஈடுபட்டால் அதன் அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என்கிறது. ஒன்றிய அரசு நிறைவேற்றி வைத்துள்ள தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் அமல்படுத்தப்படுமானால் இந்த படுமோசமான கருப்பு விதி இன்னும் கடுமையானதாக உருவெடுக்கும்.

**IREF ன் எழுச்சி!**

2014இல் உருவாக்கப்பட்ட இந்திய ரயில்வே தொழிலாளர் கூட்டமைப்பு என்ற IREF, 2019 ல் AICCTU உடன் இணைக்கப்பட்டது. மொத்தமுள்ள 17 மண்டலங்களில் 11 மண்டலங்களிலும், 5 உற்பத்தித் தொழிற்சாலைகளிலும் என மொத்தம் 16 இரயில்வே சங்கங்கள் இணைந்துள்ள IREFன் நோக்கமானது, இரயில்வே துறையில் ஒரு இடது தொழிற்சங்க கூட்டமைப்பை உருவாக்குவதாகும்.

மோடி அரசாங்கம் இரயில்வே தொழிலாளர்கள் மீது கடும் தாக்குதலை தொடுத்து வரும் போது, ஏற்கனவே செயல்பட்டு வருகின்ற AIRF ,NFIR கூட்டமைப்புகள் செயலற்றுப் போயும் சமரசம் செய்தும் கொண்டிருந்த பின்னணியில் IREF உதயமானது. தேசிய ஓய்வூதியத் திட்டம்/ புதிய ஓய்வூதியத் திட்டம், காண்ட்ராக்ட்மயம், தனியார்மயம், அவுட்சோர்சிங், பணிகளை ஒப்படைத்தல், காலிப் பணியிடங்கள் நிரப்பாமை ஆகியவற்றிற்கு எதிராகவும் தொழிலாளர்களின் பாதுகாப்பை உத்தரவாதம் செய்யவும் IREF தொடர்ந்து போராடி வருகிறது.

இரயில் பாதை பராமரிப்பு பணியாளர்களின் மோசமான பணி நிலைமைகள் (கேங்மேன் என்று அழைக்கப்பட்டவர்கள்) குறித்து இரயில்வேக்கான நாடாளுமன்ற நிலைக் குழு உறுப்பினர் தோழர்.சுதாமா பிரசாத் எம்.பி மூலம் மனு அளிக்கப்பட்டுள்ளது. கேங்மேன், லோகோ ஓட்டுனர்கள், கார்டுகள் என்று பலதரப்பட்ட ரயில்வே தொழிலாளர்களின் ஆதரவினால் தான் IREF வெற்றி பெற முடிந்தது.

இரயில்வே ஊழியர்கள் கொண்டுள்ள நம்பிக்கை, ஆதரவின் மூலம் கிடைத்துள்ள இந்த குறிப்பிடத்தக்க வெற்றியானது AICCTU - IREF ஐ நன்கு வலுப்படுத்தியுள்ளது. இன்னும் கூடுதல் உறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் இரயில்வே ஊழியர் நலன் காக்கும் போராட்டங்களை மேற்கொண்டு தீவிரமாக முன்னெடுத்துச் செல்ல AICCTU - IREF உறுதியளிக்கிறது.

இரயில்வேயில் ஒரு, போராடும் மாற்று இடதுசாரி சம்மேளனமாக IREF அய் வளர்த்தெடுக்க நாம் அனைத்து முயற்சிகளையும் செய்வோம்.

**-தேசிகன்**




# அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர்கள் சங்கம் 2வது அகில இந்திய மாநாடு

## கட்டாக்; ஒடிஷா

அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர்கள் சங்கத்தின் (AILAJ) 2வது அகில இந்திய மாநாடு, 2024 டிசம்பர் 21, 22 தேதிகளில் ஒடிஷா மாநிலம், கட்டாக்கில் நடைபெற்றது. 16 மாநிலங்களில் இருந்து 150 க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். முதல் அகில இந்திய மாநாடு 2022 ஆம் ஆண்டு மே மாதம் பெங்களூருவில் நடைபெற்றது.

டிசம்பர் 21, மாநாட்டின் முதல் நாளில், 'நீதித்துறையின் சுதந்திரம்' என்ற பெயரில் பொதுக் கருத்தரங்கம் நடைபெற்றது. அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கத்தின் தேசியத் தலைவர் மைத்ரி கிருஷ்ணன் துவக்கவுரையாற்றினார். உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி பி.கே. பட்நாயக் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். தனது உரையில், அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர்கள் சங்கமானது மக்களுக்குச் சேவை செய்வதையும் அரசமைப்புச்சட்டத்தின் மதிப்புகளை முன்னெடுத்துச் செல்வதையும் அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளதை பாராட்டிய அவர், நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட பின்னணியில், நீதிமன்றம் தன்னுடைய அறநெறிக் கடமைகளைத் துறந்து விட்டிருந்த சூழ்நிலையில் நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாக்க உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் கொலீஜியம் முறை அறிமுகப்படுத்தப்பட்டதை நினைவு கூர்ந்தார். மேலும், வழக்கறிஞர்கள் ஜனநாயகத்தின்பாதுகாவலர்களாக இருக்க வேண்டும் எனவும் அரசமைப்புச் சட்டத்தின் மாண்புகளை பொதுமக்கள் மத்தியில் கொண்டு செல்லக் கூடிய முன்னணி படை வீரர்களாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும், ஜனநாயகம் என்பது ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை வாக்களிப்பது மட்டும் அல்ல. அன்றாட நடவடிக்கைகளில் அதை அமல்படுத்திட அரசைப் பொறுப்பாக்குவது தான் மிகவும் முக்கியமானது எனக் குறிப்பிட்டார்.

சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதிபதி சந்துரு கருத்தரங்கத்தில் சிறப்புரையாற்றினார். ஜெய்பீம் முழக்கத்துடன் தனது உரையைத் துவக்கிய அவர், அம்பேத்கரைப் பற்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் சமீபத்திய பேச்சுக்கு கண்டனத்தைத் தெரிவித்தார். தொடர்ந்து அவர், "நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக பெற்ற இடங்கள் குறைந்துள்ளதானது அரசமைப்புச் சட்டத்தை மீட்டெடுப்பதற்கான மக்களின் வெளிப்பாடாகும். பாஜக எண்ணிக்கை குறைந்ததால் தான், அதனால் வஃக்பு மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியவில்லை எனக் குறிப்பிட்டார். அரசமைப்புச்சட்டம் ஒரு புனித நூலோ அல்லது வேதமோ அல்ல. அது மக்கள் அதிகாரத்தைச் செயல்படுத்துவதற்கானது. உண்மையில், நமது நீதித்துறை சுதந்திரமானதாக இருக்க வேண்டும் என்றால், அரசமைப்புச் சட்டத்தின் படி உறுதிமொழி எடுத்துக் கொண்டுள்ள நீதிபதிகள், அரசமைப்புச் சட்டத்திற்கு விசுவாசத்துடன் இருப்பதுடன், அதை தங்கள் தீர்ப்பு மற்றும் நடத்தையிலும் காட்ட வேண்டும். ஆனால், துரதிஷ்டவசமாக, நீதித்துறையானது அதில் மீண்டும் மீண்டும் தோல்வியடைந்து வருகிறது. உதாரணத்திற்கு, சிறுபான்மை சமூகத்தினர் மீது வெறுப்பைக் கக்கிய ஒருவர், வழக்கறிஞர்கள் பலரின் எதிர்ப்பையும் மீறி சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அதே போல இன்னொரு நிகழ்ச்சி சமீபத்தில் அலிகாபாத் நீதிபதி ஒருவர் பெரும்பான்மை சமூகத்தினரால்தான் இந்த நாடு நடத்தப்படுகிறது என்று பேசினார். இந்த இரண்டு நிகழ்வுகளுமே நீதித்துறையே அரசமைப்புச் சட்டத்தை அவமதிப்புக்குள்ளாக்குவதை வெளிக்காட்டுகிறது. கொலீஜியம் முறை கூட எந்த அளவிற்கு சுதந்திரமாகவும் நீதியின்படியும் வெளிப்படையாகவும் செயல்படுகிறது என்பது கேள்விக்குறிதான். கொலீஜியம் பாரபட்சமாகச் செயல்படுகிறது என்பதற்கு சமீபத்திய உதாரணமானது மூத்த வழக்கறிஞர் சவுரவ் கிருபால், ஒரு தன் பாலின உணர்வாளர் என்பதற்காக உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படுவதில் இருந்து நிறுத்தி வைக்கப்பட்டது ஆகும்.

கொலீஜியம் நாக்பூரில் உள்ள அரசியல் தலைமையகத்தின் உத்தரவுகளுக்கு அடிபணிந்து சமரசம் செய்து கொண்டு அரசியல் சார்புள்ள நீதிபதிகளை நியமிக்கின்றது. ஏராளமான வழக்குகள் தேங்கிப் போய், நீதிக்காக காத்துக் கிடக்கின்றன. அவற்றில் ஒன்றான சபரிமலை கோயிலுக்குள் எல்லாப் பெண்களும் செல்வது தொடர்பான சீராய்வு மனுவும் நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்திலேயே இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படாமல் உள்ளது. பெண்கள் அனைவரையும் சபரிமலை கோயிலுக்குள் செல்லவிடாமல் தடுப்பது என்பது அரசமைப்புச்சட்டம் பிரிவு 17ன்படி தீண்டாமைக்கு சமமாகும் என்று உச்ச நீதிமன்றம் சொல்லிவிட்ட பின்னரும் கூட பெண்கள் கோயிலுக்குள் செல்ல முடியாத நிலை உள்ளது. அரசின் நடவடிக்கைளும் கூட அரசமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானதாக உள்ளன. கல்வி நிறுவனங்களில் இளம் இஸ்லாமியப் பெண்கள் பர்தா அணியக் கூடாது என்று தடை செய்து அரசே அவர்களுக்கு இன்னல்களை ஏற்படுத்தியது. பள்ளிவாசலுக்குள் சென்று ஜெய் ஸ்ரீராம் என்று முழக்கமிடுவது எல்லாம் ஒரு பிரச்சனையே இல்லை என்று சமீபத்தில் கர்நாடகா உயர்நீதிமன்ற நீதிபதி கூறினார். அரசமைப்புச் சட்டம் என்பது வழக்கறிஞர்களுக்கானது என்பதுபோல் பாவிக்கக் கூடாது. அது மக்களுக்கானது என்றும் அதைப் பாதுகாத்து உயிர்ப்புடன் வைத்திருக்க மக்கள் போராட முன்வரவேண்டும் என்றும் பொது மக்களிடம் நாம் அறிவுறுத்த வேண்டும். நாம் ஒரு சமூகமாக ஒன்றுபட்டு விழிப்புடன் நிற்போமானால், நீதிபதிகள் எதுவும் செய்யமுடியாது.'' என்று கூறினார்.

முதல் நாள் மதிய உணவிற்குப் பின்னர், பிரதிநிதிகள் மாநாடு தொடங்கியது. மறைந்த பல்வேறு தலைவர்கள், மனித உரிமைப் போராளிகள், வழக்கறிஞர்கள் உள்ளிட்டோருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. மாநாட்டு அறிக்கையை பொதுச் செயலாளர் கிளிஃப்டன் ரொசாரியோ முன்வைத்தார். அன்று மாலை அம்பேத்காரைப் பற்றி அவதூறாகப் பேசிய அமித்ஷாவைக் கண்டித்தும் பதவி விலகக் கோரியும் மெழுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அறிக்கையின் மீது பிரதிநிதி வழக்கறிஞர்கள் தங்கள் கருத்துகளை முன்வைத்தார்கள். பின்னர் அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்னர் மாநிலங்களின் வேலையறிக்கையை அந்தந்த மாநிலப் பிரதிநிதிகள் முன்வைத்தனர். 43 பேர் கொண்ட தேசியக்குழு தேர்வு செய்யப்பட்டது. அதிலிருந்து 11 நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டார்கள். அகில இந்திய தலைவராக மைத்ரி கிருஷ்ணன், பொதுச் செயலாளராக கிளிஃப்டன் ரொசாரியோ, துணைத் தலைவர்களாக ஜி.ரமேஷ், திவாகர், மஞ்சு சர்மா ஆகியோர் மீண்டும் தேர்வு செய்யப்பட்டார்கள். தமிழ்நாட்டில் இருந்து தேசியக்குழுவில் அதியமான், ரவிக்குமார், கென்னடி




ஆகியோர் இடம்பெற்றுள்ளார்கள். ராஜ்குமார் தேசியக்குழுவின் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொள்வார்.

**மாநாட்டில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

1. மக்களுக்காகவும் அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்பதற்காகவும் நீதித்துறை சார்ந்த சகோதரர்களுக்காகவும் ஒன்றுபட்டு நிற்க மாநாடு உறுதியேற்றுக் கொண்டது.

2. வழக்கறிஞர்கள் மீது அதிகரித்து வரும் தாக்குதல்களுக்கு முடிவுகட்ட மத்திய, மாநில அரசுகள் உடன் நடவடிக்கைகள் மேற்கோள்ள வேண்டும். ராஜஸ்தான், கர்நாடகா, கேரள மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்கள் வழக்கறிஞர்களைப் பாதுகாக்க சட்டம் இயற்றவில்லை. இது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. அனைத்து மாநிலங்களும் வழக்கறிஞர்கள் பாதுகாப்புச் சட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர்கள் சங்கம் முன்வைத்துள்ள வழக்கறிஞர்கள் பாதுகாப்பு வரைவுச் சட்டத்தை அனைவரிடமும் கொண்டு செல்லவும் பரப்புரை இயக்கம் மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

3. இளம் வழக்கறிஞர்களுக்கு உதவித் தொகை, வழக்கறிஞர்களுக்கு மருத்துவக் காப்பீடு, 65 வயதிற்கு மேற்பட்ட வழக்கறிஞர்களுக்கு ஓய்வூதியம், வழக்கறிஞர் எழுத்தர்கள் உள்ளிட்டவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை அரசாங்கமும் பார் கவுன்சில்களும் உத்தரவாதப்படுத்திட வேண்டும் என மாநாடு தீர்மானம் நிறைவேற்றியது.

4. ஒன்றிய அரசால் இயற்றப்படும் சட்டங்களின் பெயர்கள் ஆங்கிலத்தில் தான் இருக்க வேண்டும் என்ற இந்திய அரசியலமைப்புச் சட்ட உறுப்பு 348 க்கு எதிராக புதிய குற்றவியல் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. இது இந்திய நாட்டின் கூட்டாட்சிக்கு எதிரானதாகும். புதிய குற்றவியல் சட்டங்களுக்கு எதிராக தமிழ்நாட்டின் ஜாக் அமைப்பு மேற்கொண்ட போராட்ட முயற்சிகளில் அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர்கள் சங்கமும் குறிப்பிடத்தக்க பங்காற்றியதற்கு மாநாடு பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறது.

# முன்மொழியப்பட்டுள்ள வக்ஃப் (திருத்த) மசோதாவை திரும்பப் பெற வேண்டுமென இககமாலெ மக்களவை உறுப்பினர்கள் கோரிக்கை

முன்மொழியப்பட்டுள்ள வக்ஃப் (திருத்த) மசோதா 2024 சம்பந்தமாக, இகக(மாலெ) மக்களவை உறுப்பினர்கள் தோழர் ராஜாராம் சிங், தோழர் சுதாமா பிரசாத் ஆகியோர் கூட்டு நாடாளுமன்ற கமிட்டிக்கு செப்டம்பர் 12, 2024 அன்று சமர்ப்பித்த கடிதத்தில் பின்வருவனவற்றை வலியுறுத்தியுள்ளனர்.

முன்மொழியப்பட்டுள்ள இந்தச் சட்டம், முஸ்லிம் சமூகத்தினர் மீது அப்பட்டமான தப்பெண்ணம் கொண்டதாகவும், அரசமைப்புச் சட்டத்தின் கீழ் அவர்கள் அனுபவிக்கிற மதச் சுதந்திரம், நம்பிக்கையின் மீது நேரடியாக தாக்குதல் தொடுப்பதாகவும் அமைந்துள்ளது. இந்த வக்ஃப் (திருத்த) மசோதா 2024 அய் நெருக்கமாக ஆராய்ந்தால் நாம் பெறக்கூடிய மறுக்க முடியாத முடிவு இதுவேயாகும். முன்மொழியப்பட்டுள்ள வக்ஃப் திருத்தம், இஸ்லாமிய நிறுவனமான வக்ஃப்-களையும் அதன் ஆட்சி நிர்வாகத்தையும் கலைப்பதற்கு ஒப்பானதாகும். மேலும் காழ்ப்புணர்வு கொண்ட ஒரு சட்டத்தை உருவாக்கும் அப்பட்டமான நடவடிக்கையாகும்.

விரிவான கலந்தாலோசனை செயல் முறைக்குப் பிறகு வக்ஃப் சட்டத்திற்கு 2013ல் கொண்டுவரப்பட்ட திறன்மிக்க திருத்தங்களை முழுவதுமாக ஒழித்துக் கட்டும் முயற்சியுமாகும். தெருக்களில் அல்லது நாடாளுமன்றத்தில் பலதரப்பட்ட சிறுபான்மையினரின் உரிமை களையும் விருப்பங்களையும் இடித்துத் தள்ளுகிற பெரும்பான்மைவாதத்துக்கு எங்கும் இடமிருக்க முடியாது.

நீதிபதி ராஜிந்தர் சச்சார் கமிட்டியின் 2006 ஆம் ஆண்டு அறிக்கை, சமூகநல நடவடிக்கைகளில் ஈடுபடுகிற சமூக-மத நிறுவனமாக வக்ஃப்-களை அங்கீகரித்தது. மேலும் தேவையான நிதி, சட்ட ஆதரவுடன் நிர்வாக ரீதியாக வக்ஃப் வாரியங்கள் வலுப்படுத்தப்பட வேண்டிய அவசியத்தையும் அங்கீகரித்தது. இதற்கு மாறாக, இப்போது முன்மொழியப்பட்டுள்ள இந்த திருத்த மசோதா இந்துத்துவாவின் அரசியல் கருத்தியலை சங்கேத மொழியில் சட்டமாக்கும் முயற்சியாகும்.

வக்ஃப்பின் சொத்துகள் மத, சமூக நோக்கங்களுக்காக முஸ்லிம் சமூக தனிநபர்கள் அறச்செயல்களுக்காக வழங்கிய நன்கொடைகளாகும். இதனை மதிக்காமல் அவற்றின் மீது பெரும் கட்டுப்பாட்டை கொண்டு வரும் ஒன்றிய அரசின் நோக்கம், முன்மொழியப்பட்டுள்ள இந்த மசோதாவின் எளிய வாசிப்பிலேயே அப்பட்டமாக தெரிந்து விடுகிறது.

வக்ஃப் வாரியங்களின் அதிகாரங்கள், பாத்திரம், சட்ட உரிமை ஆகியவற்றில் அடிப்படை மாற்றத்தை, இந்த மசோதா வெளிப்படுத்துகிறது. ஒரு குறிப்பிட்ட சொத்து, வக்ஃப் வாரியத்தின் சொத்தா இல்லையா என முடிவெடுப்பதற்கு அதிகாரமற்றவர்களாக அவர்களை ஆக்குவதன் மூலமும், முஸ்லிம் அல்லாதவர்களையும் நியமிக்கக் கூடிய நியமன நிறுவனங்களாக அவற்றின் முக்கியத்துவத்தைக் குறைப்பதன் மூலமும் வக்ஃப்களின் தன்னாட்சியை வலுவிழக்கச் செய்வதன் மூலம் இது செய்யப்படுகிறது. உண்மையில் சச்சார் கமிட்டி அறிக்கை வக்ஃப்பின் சொத்துகளை திறன்மிகு விதத்தில் மேலாண்மை செய்வதற்காக இந்த வாரியங்களை கூடுதல் அதிகாரமுடையதாக்குவதை முன்மொழிந்தது. மாறாக இந்த மசோதா, (வக்ஃப்) வாரியங்களை வெறும் பார்வையாளர்களாக்கி விடுகிறது; இவ்வாறு இவற்றின் முக்கியத்துவத்தைக் குறைப்பதன் மூலம் வக்ஃப்-களின் கட்டுப்பாட்டை எடுத்துக் கொள்ள முயற்சிக்கிறது. அதேவேளையில் அவற்றின் அதிகாரங்களை வருவாய் அதிகாரிகளின் கைகளுக்கு மாற்றுவதன் மூலம் வெறுமனே கட்டுப்படுத்துபவர் என்பதாக உள்ள அரசின் பாத்திரத்தை அடிப்படையிலேயே மாற்றி அமைக்கிறது.

வக்ஃப் உருவாக்கத்தை தடுக்கிற வரையறைகள், நிபந்தனைகளில் முன்மொழி யப்பட்டுள்ள மாற்றங்களைமொத்தமாக வாசிக்கும் போது, வக்ஃப்-ஆக பயன்படுத்தப்படும் நிலத்தை அங்கீகாரமற்றதாக்கும் முயற்சியைக் காணலாம். மேலும் வக்ஃப்-களை உருவாக்குகிற நபரின் உரிமையையும் இது தடுக்கிறது. "வக்ஃப் பயன்பாட்டாளர்" என்ற கூற்றை நீக்கியிருப்பதன் மூலம் அதுபோன்று பயன்படுத்தப்படும் வக்ஃப்-களையும், ஆவணங்கள் இல்லாமல் இருக்க வாய்ப்புள்ள ஆனால் வக்ஃப்பின் சொத்துகள் என்ற தன்மையைத் தக்கவைத்துக்கொள்ளும் நிலங்களையும் இழக்கும் ஆபத்தில் தள்ளுகிறது. வக்ஃப் வாரியங்களில் முஸ்லிம் அல்லாதவர்களையும் இணைக்கலாம் எனவும், கூடுதலாக தற்போதிருக்கும் சட்டம் முஸ்லிம் அல்லாதவர்கள் வக்ஃப்களை உருவாக்க அனுமதிப்பதையும் தடை செய்கிறது.

முன்மொழியப்பட்டுள்ள இந்த மசோதா, வாரியங்கள், வக்ஃப் கவுன்சில், பிற அதுபோன்ற வக்ஃப்பின் பங்குதாரர்கள் ஆகியோரிடம் கவனிக்கத்தக்க விதத்தில் எவ்வித அர்த்தமுள்ள கலந்தாலோசனையையும் செய்யாமல் அதனை சிதைக்கிறது. அதேவேளையில் கூட்டு நாடாளுமன்ற கமிட்டி நடத்தப்பட்ட விதத்தில் இந்த திருத்தங்களின் வாயிலாக

- தொடர்ச்சி 12ம் பக்கம்

# இடது நிகழ்ச்சிநிரலால் தமிழ்நாட்டு அரசியல் முகத்தை மாற்றியமைக்க வேண்டும்.




**2025; ஜனவரி 3–5 நாட்களில் விழுப்புரத்தில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) 24 வது மாநாட்டில் இகக(மாலெ) மாநிலச் செயலாளர் பழ. ஆசைத்தம்பி வாழ்த்திப் பேசியபோது**

மிகச் சிறப்பாக திட்டமிட்டு நடந்து கொண்டிருக்கும் இகக(மா) வின் 24 வது மாநில மாநாட்டின் தலைமைக்குழு தோழர்களுக்கும், அரசியல் தலைமைக்குழு ஒருங்கிணைப்பாளர் தோழர் பிரகாஷ் காரத் அவர்களுக்கும் மாநிலச் செயலாளர் தோழர் கே பாலகிருஷ்ணன் அவர்களுக்கும், அரசியல் தலைமைக் குழு உறுப்பினர்கள் தோழர் ஜி.ராமகிருஷ்ணன், தோழர் பிருந்தா காரத் அவர்களுக்கும், மத்தியக் கமிட்டி உறுப்பினர்களுக்கும், மாநாட்டு பிரதிநிதித் தோழர்களுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ( மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) மாநிலக் கமிட்டியின் செவ்வணக்கங்களை தெரிவித்துக் கொள்கிறேன். மாநாட்டை வாழ்த்திப் பேச வருகை தந்துள்ள இகக மாநிலச் செயலாளர் தோழர் முத்தரசன் அவர்களுக்கும் செவ்வணக்கம்.

மார்க்சிஸ்ட் கட்சியின் மேனாள் பொதுச் செயலாளர் தோழர் சீதாராம் யெச்சூரி, விடுதலைப் போராட்ட வீரர் தோழர் சங்கரய்யா அவர்களுக்கும் எமது மாநிலக் கமிட்டியின் செவ்வஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலத்தில் டிசம்பர் 28, 29 தேதிகளில் எமது கட்சியின் மாநிலக் கமிட்டி கூடியது. இகக(மா) மாநில மாநாட்டில் கலந்து கொண்டு வாழ்த்திப் பேச விடுத்த அழைப்பு குறித்து மிகுந்த மகிழ்ச்சி தெரிவித்ததோடு மாநாடு வெற்றி பெற புரட்சிகர வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டது.

தோழர்களே,

அரசமைப்புச் சட்ட குறிக்கோள்களுக்கும் விழுமியங்களுக்கும் அச்சுறுத்தலாக, மோடியின் மூன்றாவது ஆட்சி அமைந்துள்ளது. அண்ணல் அம்பேத்கரை இழிவுபடுத்தும் உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் கருத்து இதை தெளிவு படுத்துகிறது. அமித்ஷாவை ஆதரித்துப் பேசிய பிரதமர் மோடியின் கருத்து இதை உறுதிப்படுத்துகிறது. கார்ப்பரேட் -மதவெறி பாசிஸ்ட் ஆட்சி, இயற்கை வளம், மனிதவளம், மக்கள் ஒற்றுமை, பன்மைத்துவம், வரலாறு, உள்ளிட்ட அனைத்தையும் கபளீகரம் செய்யும் மூர்க்கத் தனத்தில் இறங்கியுள்ளது. இதை அரியானா, மகாராஷ்ட்ரா தேர்தல்களில் பார்க்க முடிந்தது. தேர்தல் போராட்டத்தின் மூலம், பாசிஸ்ட்களின் உடும்புப்பிடியிலிருந்து எளிதாக இந்தியாவை மீட்டெடுத்துவிடமுடியாது. எனவே பாசிசப் பேரிடரிலிருந்து இந்தியாவை மீட்டெடுப்பது இந்திய கம்யூனிஸ்டுகளின் தலையாயக் கடமையாகும்.

எனவே, எந்தளவுக்கு இடதுசாரிகளின் ஒற்றுமை வலுப்படுகிறதோ அந்தளவுக்கு பாசிசத்துக்கு எதிரான போராட்டமும் வலுப்பெறும். இந்தியாவின் ஜனநாயகமும் ஒளிபெறும் என்று எமது கட்சியின் பொதுச் செயலாளர் திபங்கர், கோழிக்கோடு பல்கலைக்கழக தோழர் ஈஎம்எஸ் இருக்கையின் சார்பில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில் வலியுறுத்தினார்.

இதைச் சுட்டிக்காட்டும் விதமாகத்தான் டிசம்பர் 22 அன்று இடதுசாரிகட்சிகள் தில்லியில் ஒன்று கூடி உடனடி பிரச்சனைகளில் நாடு தழுவிய அளவில் கிளர்ச்சி நடத்த அழைப்பு விடுத்தன. இதை மேலும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். விழுப்புரத்தில் விழாக்கோலம் கொண்டுள்ள மாநில மாநாடும் இதன் தொடர்ச்சியாக மீண்டும் மதுரையில் கூட விருக்கும் அகில இந்திய மாநாடும் இடதுசாரி ஒற்றுமைக்கு உறுதிமிக்க முடிவுகளை எடுக்குமென்றும் உளமார நம்புகிறோம்.

தமிழ்நாடு, தொடர்ந்து பாசிஸ்டுகளுக்கு கடும் அச்சுறுத்தலை கொடுத்து வருகிறது. சாட்டையால் அடித்துக் கொண்டாவது

தமிழ்நாட்டை தலைக்குப்புற கவிழ்க்க முடியுமா என்று பாசிஸ்டுகள் முயற்சிக்கின்றனர். நீண்ட இடது, முற்போக்கு, ஜனநாயக வரலாறு கொண்ட தமிழ்நாட்டை அவர்கள் எளிதில் வசப்படுத்திவிட முடியாது என்று மற்றவர்கள் போல் எண்ணி நாம் வாளாவிருக்க முடியாது. அவர்கள் வேர் விடுவதையும் நாம் கவனத்தில் கொண்டாக வேண்டும்.

இகக(மாலெ)வுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்கும் இடையேயான நெருக்கமான உறவும் ஒத்துழைப்பும் வளர்ந்து வருவதை மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தஞ்சையில் எமது கட்சி நடத்திய பாசிச எதிர்ப்பு மாநாட்டில் மார்க்சிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர் தோழர் உ. வாசுகி அவர்கள் கலந்து கொண்டார்கள்.

கட்சியின் மாநில மாநாட்டு நிகழ்வில் மாநிலச் செயலாளர் தோழர் கே. பாலகிருஷ்ணன் அவர்களும்,இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளரும் கலந்து கொண்டனர்.

எமது கட்சியின் மேனாள் மாநிலச் செயலாளர் தோழர் என் கே நடராசன் மறைந்த இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் பால கிருஷ்ணன் அவர்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.

மார்க்சிஸ்ட் கட்சியின் மேனாள் பொதுச் செயலாளர் தோழர் சீதாராம் யெச்சூரி திடீர் மறைவை நினைவுகூரும் வகையில் சென்னையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன். நம்மிடையே நூறாண்டு வாழ்ந்து விடைபெற்ற, விடுதலைப் போராட்ட வீரர் தோழர் என். சங்கரய்யா அவர்களின் அஞ்சலிக் கூட்டத்தில் மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கட்சியின் சார்பில் நான் கலந்து கொண்டேன். சென்னையில் மார்க்சிஸ்ட் கட்சி நடத்திய இஸ்ரேல் எதிர்ப்பு போராட்டம்; ராகுல் காந்தி பதவி பறிப்பு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஒன்றாய் கலந்து கொண்டோம்.

தஞ்சாவூரில், சிபிஐ எம்எல் நடத்திய **"வீழ்க பாசிசம் வெல்க இந்தியா"** மாநாட்டில், தோழர் கே.பி அவர்கள் கலந்து கொண்டார்கள். சிபிஐஎம்எல், கன்னியாகுமரி மாவட்டத்தில் நடத்திய **"மணிப்பூர் கொடுமைகளை மன்னிக்க மாட்டோம்"** என்கிற தலைப்பில் நடைபெற்ற சிறப்பு மாநாட்டில் தோழர் மதுக்கூர் ராமலிங்கம் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

நூறாண்டு கண்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் போராளி தோழர் நல்லக்கண்ணு அவர்களின் நூற்றாண்டு நிகழ்வில் எமது கட்சி சார்பில் மார்க்சிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் தோழர் கேபி அவர்களுடன் கலந்து கொண்டேன்.

மோடி ஆட்சியின் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்க்கும் போராட்டங்களிலும் கூட்டாக கலந்து கொண்டோம். அண்ணல் அம்பேத்கரை இழிவுபடுத்தி பேசிய அமித்ஷா பதவி விலகக் கோரி 2024, டிசம்பர் 30 அன்று மாநிலம் முழுவதும் நடைபெற்ற இடதுசாரி கூட்டுப் போராட்டத்தில் நாம் ஒன்றாய் கலந்து கொண்டோம். பாசிச பாஜக-ஆர்எஸ்எஸ்மோடி ஆட்சிக்கு சிம்மசொப்பனமாக மக்களவையில் சிபிஅய்(எம் எல்), மார்க்சிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மக்களவை உறுப்பினர்கள் முழங்கி வருகிறார்கள் என்பதையும், இடதுசாரி ஒற்றுமை உணர்வோடு மார்க்சிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டில் மகிழ்ச்சியுடன் நினைவு கூருகிறேன். இடது ஒற்றுமை தமிழ்நாடு அரசியலிலும் இன்னும் வலுப்பெற வேண்டுமென விழைகிறோம்.

மதச்சார்பற்ற, அம்பேத்கர்- பெரியார் மரபுகள், முற்போக்கு, ஜனநாயக சக்திகளோடு களப் போராட்டங்களிலும் தேர்தல் போராட்டங்களிலும் கரம் கோர்க்க வேண்டுமென்பதில் அய்யமில்லை. ஆனால் இது ஆற்றல்மிக்க மக்கள் எழுச்சியாக உருவெடுக்க இடதுசாரி புத்தெழுச்சி வேண்டும். ஆணவப்படுகொலைகள், தலித்துகள் மீதான கொடூரமான ஒடுக்குமுறைகள், பெண்கள்மீதா வன்கொடுமைகள், கிராமப்புர வறுமை, கார்ப்பரேட் கொடுஞ்சுரண்டல், சங்க உரிமை மறுப்பு தமிழ்நாட்டில் தீவிரமடைந்து வருகிறது. இவற்றுக்கு எதிராக இகக, இகக(மா), இகக (மாலெ) மூன்று நீரோட்டங்களும் தமது சொந்த வலுமிக்க வளர்ச்சியை கொண்டுவந்தாக வேண்டும். அதே வேளை உறுதிமிக்க இடது ஒற்றுமையை வளர்த்தாக வேண்டும். இடது நிகழ்ச்சிநிரலால் தமிழ்நாட்டு அரசியல் முகத்தை மாற்றியமைக்க வேண்டும். கம்யூனிஸ்ட் இயக்கத்தின் நூறாவது ஆண்டில் புகழ்வாய்ந்த இடது போராட்ட மரபை மீண்டும் அரசியல் களத்தில் வலுவாக காலூன்றச் செய்ய வேண்டும்.

மாநாட்டில் கலந்து கொள்ள அழைப்புவிடுத்த இகக(மா) மாநிலக் குழுவுக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநாடு பெருவெற்றிபெற புரட்சி வாழ்த்துகள்!

**இன்குலாப் ஜிந்தாபாத்!**

*மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது தமிழ்நாடு மாநில மாநாட்டில் இகக(மாலெ) சார்பாக தோழர்கள் பாலசுந்தரம், சோ.பாலசுப்பிரமணியன், கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் டி. கலியமூர்த்தி, கடலூர் மாவட்டச் செயலாளர் ராஜசங்கர், புரட்சிகர இளைஞர் கழக மாநிலத் தலைவர் ஜி. தனவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.*



**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி;**
**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்);**
**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) (லிபரேஷன்);**
**புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி;**
**அகில இந்திய பார்வர்டு பிளாக்**

*உள்ளிட்ட இடதுசாரி கட்சிகளின் தலைவர்கள் டிசம்பர் 22, 2024 அன்று டெல்லியில் கூடிப் பேசி வெளிட்ட அறிக்கை*

**அமித்ஷா பதவி விலக வேண்டும்!**

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, மாநிலங்களவையில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் குறித்து குறிப்பிட்ட அவமதிப்புமிக்க கண்ணியக் குறைவான பேச்சை அடுத்து நாடு முழுவதும் பரந்த அளவில் கோபமும் அதற்கு எதிர்ப்பும் நடந்து வருவதை கூட்டம் கவனத்தில் கொண்டது. ஆயினும், அமித் ஷாவோ அல்லது பிரதம மந்திரி மோடியோ அதற்கான பொறுப்பேற்று சரி செய்யும் நடவடிக்கை எதுவும் எடுக்க விரும்பவில்லை. ஆகவே, இடதுசாரிக் கட்சிகள் நடந்து வரும் எதிர்ப்புப் போராட்டத்தை தொடர்வது என்றும், டிசம்பர் 30 அன்று கூட்டாக எதிர்ப்புப் போராட்டத்தைக் கட்டமைப்பது என்றும் முடிவு செய்தன. உள்துறை அமைச்சர் பொறுப்பிலிருந்து அமித்ஷா பதவி விலக வேண்டும் என்பது நாடுதழுவிய எதிர்ப்பு நாள் கோரிக்கையாக இருக்கும்.

**ஒரே சமயத்தில் தேர்தல்: ஜனநாயகத்தின் மீதான கூட்டாட்சி மீதான தாக்குதல்.**

அரசியலமைப்புச் சட்டத்திருத்த மசோதா உட்பட இரண்டு திருத்த மசோதாக்கள் மூலம் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 'ஒரு தேசம், ஒரு தேர்தல்' என்ற முன்மொழிவை இடதுசாரிக் கட்சிகள் சந்தேகத்திற்கிடமற்ற வகையில் எதிர்க்கிறோம். அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்கான இந்த முன்மொழிவுகள் கூட்டாட்சிக் கட்டமைப்பின் மீதும், மாநில சட்டமன்றங்களின் அவற்றைத் தேர்ந்தெடுத்த மக்களின் உரிமைகளின் மீதும் நடத்தப்படும் நேரடித் தாக்குதலாகும். இது மத்தியத்துவப்படுத்தலுக்கான ஏற்பாடு மட்டுமின்றி, சட்டமன்றத்தின் ஐந்தாண்டு காலத்தை தன்னிச்சையாகக் குறைப்பதன் மூலம் மக்களின் விருப்பத் தேர்வை முடமாக்குவதுமாகும். 'ஒரு தேசம், ஒரு தேர்தல்' திட்டத்திற்கு எதிராக இடதுசாரிக் கட்சிகள் நாடு தழுவிய பிரச்சார இயக்கத்தை நடத்திடும். சிசிடிவி கேமரா, காணொலிப் பதிவுகள் போன்ற மின்னணு ஆவணங்களை பொதுமக்கள் ஆய்வு செய்யும் உரிமையை பறிக்கும் வகையில், தேர்தல் நடத்தை விதிகளில் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தங்களை திரும்பப் பெற வேண்டும் எனவும் இடதுசாரிக் கட்சிகள் கோரிக்கை விடுக்கின்றன.

**இடதுசாரிகளின் ஒன்றுபட்ட தலையீடு குறித்து.**

வரும் காலங்களில் அரசியல் பிரச்சினைகள், மக்கள் பிரச்சனைகளில் இடதுசாரிகளின் தலையீட்டை அதிகப்படுத்துவது என கூட்டம் முடிவு செய்தது. இதற்காக, இடதுசாரிக் கொள்கைகளை முன்னிலைப்படுத்தவும், கூட்டு இயக்கங்களை வளர்க்கவும் இடதுசாரிக் கட்சிகளின் கூட்டங்கள் முறையாக நடத்தப்படும்.

**து.ராஜா**
**பொதுச் செயலாளர்; சிபிஐ**
**பிரகாஷ்காரத்**
**அரசியல் தலைமைக்குழு ஒருங்கிணைப்பாளர்; சிபிஐ(எம்)**
**திபங்கர்**
**பொதுச் செயலாளர் சிபிஐ(எம்எல்)(லிபரேஷன்)**
**மனோஜ் பட்டாச்சாரியா**
**பொதுச் செயலாளர் ஆர்எஸ்பி**
**ஜி தேவராஜன்**
**பொதுச் செயலாளர் ஏஐஎப்பி**

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 05.01.2025 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# அம்பேத்கரை அவமதித்த அமித்ஷா பதவி விலகக் கோரி,,,
# இடதுசாரிக் கட்சிகளின் போராட்டம்

















Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh